விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு நரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-8119)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 18 திங்கட்கிழமை (04.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

## அதிகாரப் பகிர்வு தேவையானால் சஜித்தை ஜனாதிபதியாக்குங்கள்

### கிளிநொச்சியில் பிரதமர் ரணில்

(கிளிநொச்சி)

2015ஆம் ஆண்டு அன்னத்திற்கு வாக்களித்த எம்மிடம் ஆட்சியை வழங்கியமையால் தான் நாட்டில் ஜனநாயகம் ஏற்பட்டது.

எனவே புதிய அரசியலமைப்பினை உருவாக்கி அதன் ஊடாக அதிகாரபகிர்வு வேண்டுமானால் மீண்டும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வருகின்ற 16ம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்க வேண்டும் என கிளிநொச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

23

ஜனாதிபதி வேட்பாளர்

## சிவாஜிலிங்கம் ரெலோவிலிருந்து விலகினார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் ரெலோ கட்சியில் இருந்து விலகிவிட்டதாக

23

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு

### தமிழரசுக் கட்சி தீர்மானம்; சுமந்திரன் தெரிவிப்பு

(வவுனியா)

**ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஏகமனதாக முடிவெடுத்துள்ளதாக தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

**வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.**



குறித்த ஊடக சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோரும் உடன் இருந்தனர்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் ஒன்று நடத்தி இருக்கிறோம். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புகுழு மற்றும் பாராளுமன்ற குழு கூட்டங்களிலும் இது பற்றி ஆராயப்பட்டிருந்தது.

இன்று (நேற்று)

23

## யாழ்.பல்கலை மருத்துவத்துறை

மாணவன் ஒருவர் சடலமாக மீட்பு



23

## ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் மாகாண சபைத் தேர்தல்

– மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் மாகாண சபைத் தேர்தலே இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் சிலர் பாராளுமன்றத் தேர்தலுககு அவசரப்படுகின்றனர். அதற்கு இன்னும் போதுமான கால அவகாசம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

23

## இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டு முன்னோக்கிச் செல்வோம்

யாழில் பிரதமர் ரணில்

(யாழ்ப்பாணம்)

பிரேமதாஸ, சந்திரிகா, மகிந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையிலேயே நாம் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ளவுள்ளோம்.

தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கவுள்ள சஜித் துரோகியென்றால், மகிந்த ராஜபக்ஷவும் துரோகிதான். அவரது கால யோசனைகளின் அடிப்படையிலேயே இதனைச் செய்யவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று யாழ்ப்பாணம் வேலணையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இதனைத்

23

## சம்பந்தன், சுமந்திரனை நோக்கி செருப்பை எறிய முற்பட்ட தாய்

### பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு



(வவுனியா)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்து வாகனத்தில் சென்ற சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் வாகனத் தொடரணிக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் தாயொருவர் செருப்பை கழற்றி எறிய முற்பட்ட போது பொலிஸார் அவரை மடக்கி பிடித்தனர்.

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மத்

23

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால்

## போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நடுத்தர மக்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

வாழ்க்கைச் சுமை அதிகரித்தமையினால் நடுத்தர மக்கள் இன்று போதைப்பொருள் வியாபாரத்திற்கும் போதைப்பொருள் பாவனைக்கும் அடிமையாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

23

சந்திரிகாவை வெளியேற்ற

## சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை கூட்டுகிறார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் காப்பாளராக உள்ள, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை, அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அபி ஸ்ரீ லங்கா இயக்கத்துக்கு தலைமை தாங்கும், சந்திரிகா குமாரதுங்க, புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதை அடுத்தே, அவரைக் கட்சிப் பதவி

23

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரக்கட்சியின் பிளவுக்கு சந்திரிகாவே காரணம் - மகிந்த

(மாத்தளை)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியவர் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, சந்திரிகா குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தற்போது பாதுகாக்க முயற்சிகளை மேற்கொள்வதாக கூறுகின்றார்.

ஆனால் ஒரு காலத்தில், அவர் தான் கட்சியில் பிளவை ஏற்படுத்திச் சென்று புதிய கட்சியை உருவாக்கினார். இதன்போது நாங்கள் தான் கட்சியைப் பாதுகாத்தோம். அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொற்காலம் ஆகும்.

எனவே, சந்திரிகா இவைகளை எல்லாம் கருத்திற்கொண்டு அறிவுப்பூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகர் மத்தியில் இயங்கும் பிரபல்ய உணவகம் ஒன்றுக்கு முழுநேர, பகுதிநேர வேலையாட்கள் தேவை.

- காசாளர்
- சிட்டை எழுதுநர்
- உணவு பரிமாறுபவர்

(உணவு, தங்குமிட வசதி உண்டு)



தொடர்புகளுக்கு:-

(842) 077 846 1024




உ

கோமாதாவை வணங்கி வாழ்வோம்

**வட்டுக்கோட்டை**

**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**

பதிவு இல. J/2058 - 28-08-1989

## விசேட பொதுக்கூட்ட முன் அறிவித்தல் - 2019

அன்புடையீர்!

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் **01.12.2019** ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்துவதென நிர்வாக சபை தீர்மானித்துள்ளது. எனவே இக் கூட்டத்திற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் **18.11.2019** க்கு முன்பாக செயலாளருக்கு எழுத்து மூலமாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்கலாம். பின்னர் வரும் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நிகழ்ச்சி நிரல் பின்னர் வழங்கப்படும்**

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.
01.11.2019

T.P : No :
021 225 2067,
076 476 7600

இங்ஙனம்:
செல்வி.செ.ரஞ்சினி
செயலாளர்

(853)

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு திலகநாதன்

(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர்
அஞ்சல் திணைக்களம் (R.A.O) )



கோப்பாய் வடக்கு ஆஸ்பத்திரியடியைப் பிறப்பிடமாகவும், புலம் வீதி கைதடி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு திலகநாதன் அவர்கள் 03.11.2019 அன்று அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (ஆசிரியர்) - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், கைதடி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அஞ்சல் அலுவலர்) - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், நாகபூசணி அம்மாள் (இளைப்பாறிய பிரதி அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், பிரதீபன் (சிரேஷ்ட முகாமையாளர் - பப்புவா நியூகினியா), சக்தியதீபன் (ஆசிரியர், கிளி/ கோணாவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்திகா (பப்புவா நியூகினியா) வின் ஆருயிர் மாமனாரும், பிரணவியின் அருமைப் பேரனும், சறோஜினிதேவி, கருணைநாதன், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் சகுந்தலாதேவி, குலேந்திரநாதன், அம்பிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

(855)

தகவல் :- குடும்பத்தினர்
தொ.பே.இல. 077 763 1681

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கிளி/திருவையாறு மகா வித்தியாலம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2019ல் சித்தியடைந்த மாணவர்கள் பெற்ற புள்ளிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சத்தியசீலன் அபிநயா | - | 167 | கணேசன் சாகித்தியன் | - | 157 |
| கிருஷ்ணகுமார் நிக்சன் | - | 165 | பாலமுரளி கஜானன் | - | 157 |
| சிறீமோகன் ஜெனக்குமரன் | - | 162 | சிவகுமார் கம்சிகா | - | 156 |
| கிருபாகரன் அருண்ஜா | - | 160 | ஜெயக்குமார் அபிநயா | - | 156 |
| திருக்குமரன் யதுசன் | - | 158 | கோபிராஜன் பிரசன்ஜா | - | 156 |

(C-8126)


வகுப்பாசிரியர்கள் :- செல்வி. ச. சகிலா, திருமதி. ரூபவதனி, பொறுப்பாசிரியர் - திருமதி. சாரதாம்பாள்,
அதிபர் - திரு. பத்மநாதன் சிறீதரன், பிரதி அதிபர் - திருமதி. இந்துறாணி

இவர்களின் வெற்றிக்கு உழைத்த அதிபர், ஆசிரியர்கள்
அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்... - பெற்றோர்கள்

# சஜித்தால் புதிய அரசியலமைப்பை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது

## சம்பந்தனும் சுமந்திரனும் மக்களை ஏமாற்றுவார்கள்

### சுரேஷ் சுட்டிக்காட்டு



**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றாலும் கூட புதிய அரசியலமைப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார்.**

யாழில் நேற்று இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் தத்தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ள நிலையில் சில கட்சிகள் இன்னும் தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக தமிழ்க் கட்சிகள் பல பரப்புரைகளை ஆரம்பித்துள்ளன.

அந்தவகையில் கடந்தமாதம் ஐந்து தமிழ்க் கட்சிகள் கூடி எடுத்த தீர்மானத்தை ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ஷ நேரடியாகவும் வெளிப்படையாகவும் மறுத்துள்ளார்.

இந்நிலையில் கோத்தாவை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளில் ஒன்றான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கோத்தா ஜனாதிபதியானால் செய்வேன் , செய்விப்பேன் என வாக்குறுதிகளை வெளிப்படையாக கூறிவருகிறார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவுக்கு மறைமுகமாக ஆதரவை வழங்கி கடந்த காலங்களில் தமிழ் மக்களை ஏமாற்றியது போல இம்முறையும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சம்பந்த னும் சுமந்திரனும் தமிழ் மக் களை ஏமாற்றப் போகிறார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

ஏக்கிய ராச்சியவுக்கு தமிழ் அர்த்தம் கற்பித்தவர்கள் சஜித் பிரேமதாஸ ஆட்சிக்கு வந்தால் எவ்வாறு புதிய அரசியலமைப்பை உருவாக்குவார்கள் என்பது சந்தேகமே!

புதிய அரசியலமைப்ப உருவாக்கப்பட வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். ஆகவே குறித்த பெரும்பான்மைப் பலத்தை சஜித் பிரேமதாஸவால் பெறமுடியும் என்பது முடியாத காரியம்.

சிங்களத் தலைவர்கள் பலருடைய காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பான தீர்வுத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

இறுதியில் என்ன நடந்தது? தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்க எந்தவொரு சிங்களத் தலைவர்களும் தயாராக இல்லை என்பதே உண்மை.

இந்த உண்மையை அறிந்த பின்பும் சில தமிழ்த் தலைவர்கள் மக்கள் மத்தியில் தவறான புரிதல்களை ஏற்படுத்தி வேட்பாளருக்கு ஆதரவு கேட்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

---

# எம்.சி.சி. உடன்பாடு கைச்சாத்திடப்படுமா?

### அமெரிக்கா சந்தேகம்

(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் இலங்கையுடனான உடன்பாடு கைச்சாத்திடப்படுமா? என்பது நிச்சயமற்றதாகவே உள்ளதாக மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன் தெரிவித்தார்.

எம்.சி.சி. உடன்பாட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்த பின்னர், அதற்கு எதிராக கடுமையான எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அதேவேளை தேர்தல் முடியும் வரை அந்த உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டாம் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளதாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன்,

"இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படுமா? என்பது தெளிவில்லாமலேயே உள்ளது. இது எம்.சி.சியின் பணிப்பாளர் குழு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது.

உடன்பாடு குறித்து தவறான பரப்புரை மேற்கொள்ளப்படுவதால். கையெழுத்திடப்படுமா? என்பது குறித்து நிச்சயமற்ற நிலை உள்ளது. எம்.சி.சி. இதற்கு முன்னர் இதுபோன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டதில்லை. டிசெம்பர் 9 ஆம் திகதி நடக்கவுள்ள எம்.சி.சியின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் இந்த முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# ஹோட்டலில் களியாட்டம் போதைப் பொருட்களுடன் 100 பேர் பொலிஸாரால் கைது

(தெஹிவளை)

தெஹிவளையில் பேஸ்புக் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட களியாட்ட நிகழ்வில் பங்கேற்ற 100 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தெஹிவளை கடற்கரைப் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு ஒன்றுகூடிய இளைஞர், யுவதிகள் போதைப் பொருளைப் பாவித்து களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது குறித்து தக்வலறிந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர், குறித்த இடத்திற்கு விரைந்து அங்கு சோதனை மேற்கொண்டதில், போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து களியாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகள் 100 பேர் கைது செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# நாளை கூடுகிறது சு.க.மத்திய குழு சஜித்துக்கான சந்திரிகாவின் ஆதரவு குறித்தும் ஆராயப்படும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நாளை செவ்வாய்க்கிழமை கூட வுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளர் பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ தலைமையில் கொழும்பு - 10 , டாலி வீதியிலுள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் மாலை 7 மணியளவில் மத்திய குழுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டமை உள்ளிட்ட நடைமுறை அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதாக பியதாஸ தெரிவித்தார். (இ-7)

---

# கோத்தபாயவுக்கு சஜித் மீண்டும் சவால்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதம் மூலம் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சஜித் மீண்டும் சவால் விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விவாதத்திற்கு வருமாறு சஜித் தனது கடிதத்தில் குறிப்பிட்டார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு கோத்தபாய ராஜபக்ஷவை அழைத்த போதிலும் அவர் வருகை தரவில்லை.

இந் நிலையில் கடிதம் மூலம் மீண்டும் அழைப்பு விடுத்ததாக சஜித் தெரிவித்தார். (இ-7)

# இரண்டாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்தை பழி தீர்த்தது நியூசிலாந்து



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது பேர்ட்டியில் நியூஸிலாந்து அணி 21 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து 177 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்துள்ளது.

## பெண்கள் கிரிக்கெட் போட்டி

# ஒரு ஓட்டத்தால் இந்தியாவை மண்கவ்வச் செய்த மே.தீவுகள்

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கெதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி, வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி உள்ளூர் நேரப்படி ஆன்டிகுவாவில் நடந்தது.

இதில் 'டாஸ்' ஜெயித்து முதலில் பட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி 7 விக்கெட் இழப்புக்கு 225 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக கப்டன் ஸ்டெபானி டெய்லர் 94 ரன்னும் (8 பவுண்டரி, 2 சிக்சர்), நடாஷா மெக்லின் 51 ரன்னும் விளா சினர்.

அடுத்து 226 ரன்கள் இலக்கை நோக்கி களம் இறங்கிய இந்திய அணி ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்கு 170 ரன்களுடன் (39.2 ஓவர்) நல்ல நிலையில் இருந்தது. ஆனால் கடைசி கட்டத்தில் இந்திய அணியின் விக்கெட்டுகள் வேகமாக சரிந்தன.

பரபரப்பான கடைசி ஓவரில் வெற்றிக்கு 9 ரன்கள் தேவை என்ற நிலையில் இறுதி ஓவரை வீசிய சுழற்பந்து வீச்சாளர் அனிசா முகமது முதல் பந்தில் எக்தா பிஸ்த் (0) விக்கெட்டையும், கடைசி பந்தில் பூனம் யாதவ் (0) விக்கெட்டையும் வீழ்த்தி திரிலிங்கான ஆட்டத்தை தங்களுக்கு சாதகமாக மாற்றிக்காட்டினார்.

50 ஓவர்களில் இந்திய அணி 224 ரன்களுக்கு 'ஆல்-அவுட்' ஆகி ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. தொடக்க ஆட்டக்காரர்கள் பிரியா பூனியா 75 ரன்னும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 41 ரன்னும் எடுத்தனர். கேப்டன் மிதலி ராஜ் 20 ரன்னில் ஸ்டம்பிங் செய்யப்பட்டார். வெஸ்ட் இண்டீஸ் பவுலர் அனிசா முகமது 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

# முஷ்பிகுர் ரஹிம் வெறித்தன ஆட்டம்; இந்தியாவுக்கு நேற்று சம்மட்டி அடி



இந்திய அணிக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 போட்டியில் முஷ்பிகுர் ரஹிமின் அசத்தலான ஆட்டத்தினால் 7 விக்கெட்டுகளால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றுள்ளது.

டெல்லியில் நேற்று இரவு 7.0C மணிக்கு ஆரம்பமான இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வுசெய்ய இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை பெற்றது.

149 ஓட்டம் என்ற .வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 19.3 ஓவரில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

லிட்டன் தாஸ் 7 ஓட்டத்துடனும், மொஹமட் நைம் 26 ஓட்டத்துடனும், சவுமி சர்கார் 39 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க அணியின் வெற்றிக்காக பெரிதும் போராடிய முஷ்பிகுர் ரஹிம் 43 பந்துகளில் 60 ஓட்டத்துடனும், மகமதுல்லா 15 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இப் போட்டியில் இந்திய அணியினை அவர்களது சொந்த மண்ணில் வீழ்த்திய பங்களாதேஷ் அணி வரலாற்று வெற்றியை பதிவுசெய்துள்ளது. அது மாத்திரமன்றி பங்களாதேஷ் அணியின் இந்த வெற்றியானது சர்வதேச இருபதுக்கு - 20 அரங்கில் இந்தியாவுக்கு எதிரான முதல் வெற்றி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 2020 ரி-20 உலகக் கிண்ணம்

# முதல் போட்டியில் அயர்லாந்தை எதிர்கொள்கிறது இலங்கை அணி

2020 ஆம் ஆண்டு சர்வதேச இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி அயர்லாந்து அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ளது.

இந்த உலகக் கிணணத் தொடரில் மொத்தம் 16 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. இதில் ஐ.சி.சி.இருபதுக்கு - 20 போட்டிகள் தரவரிசைப் பட்டியலில் முதல் பத்து இடங்களில் உள்ள பாகிஸ்தான், இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, மே.இ.தீவுகள், ஆப்கானிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் அணிகள் நேரடியாக தகுதி பெற்றன.

இந் நிலையில் தகுதிச் சுற்றின் மூலம் மீதமுள்ள 6 அணிகளை தெரிவு செய்வதற்கான போட்டிகள் ஐக்கிய அரபு எமீரகத்தில் நடைபெற்று வந்தது.

14 அணிகள் கலந்துகொண்ட இந்த தகுதிச் சுற்றின் இறுதியில் அயர்லாந்து, நமீபியா, நெதர்லாந்து, ஓமான், பபுவா நியூகினியா மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய அணிகள் 2020 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கான வாய்ப்பினை உறுதி செய்தன.

இந் நிலையில் 2020 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் குழு ஏ யில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை அணியும் அயர் லாந்து அணியும் மோதுகின்றன.

அதன்படி இப் போட்டியானது ஒக்டோபர் 18 ஆம் திகதி 'Kardinia Park' மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.




# ரி-20 உலகக்கிண்ண தகுதிச்சுற்றில் சம்பியனானது நெதர்லாந்து அணி

டி20 உலகக்கிண்ணத்துக்கான குவாலிபையர் தொடர் இறுதிப் போட்டியில் பபுவா நியூகினி யாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது நெதர்லாந்து.

டி20 உலகக் கிண்ணத்துக் கான குவா லிபையர் தொடர் துபாய் மற்றும் அபுதாபியில் நடைபெற்றது. இதில் நெர்தலாந்து - பபுவா நியூகினியா அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பபுமா நியூ கினியா 20 ஓவரில் 8 விகெட் இழப்பிற்கு 128 ரன்கள் சேர்த் தது. பின்னர்129 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து களம் இறங்கியது.

அந்த அணி 19 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 134 ரன்கள் அடித்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் நெதர்லாந்து சம்பியன் பட்டம் வென்றது.



# சஜித்தை ஆதரித்து தமிழ் மக்களை மீண்டும் பலிக்கடாவாக்க கூட்டமைப்பினர் முயற்சி

## அங்கஜன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் மக்களை மீண்டும் பலிக்கடாவாக்கப் போகிறார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சஜித்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நிலை காணப்படுவதுடன் தமது சுயலாப அரசியல் நோக்கத்திற்காக தமிழ் மக்களின் எதிர்காலத்தை அஸ்தமனமாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த கோத்தபாய ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உறுதிமொழியை வழங்கியிருந்ததோடு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என உறுதியளித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளிலும் சரி அன்றாடப் பிரச்சினைகளிலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மதில் மேல் பூனையாகவே அரசாங்கத்துடன் இணைந்திருந்தனர்.

நல்லாட்சி அரசாங்கத்தால் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைப்போம் எனக் கூறி தமது அபிலாசைகளைத் தீர்த்துக் கொண்ட சம்பவங்களே அதிகமாக உள்ளன.



இலங்கையில் வாழும் பெரும்பான்மை சமூகத்தின் பேராதரவைப் பெற்ற மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். மாறாக மேற்கத்தேய அரசுகளின் நிகழ்ச்சி நிரலில் இயங்குபவர்களால் அது முடியாத காரியமாகும்.

30 வருட யுத்தத்தில் இருந்து மீண்ட வடக்கு-கிழக்கு மக்கள் பொருளாதார ரீதியிலும் உயர்வதற்கேற்ற திட்டங்களை கோத்தபாய ராஜபக்ஷவிடம் கையளித்தேன்.

2017 ஆம் ஆண்டு 7 சதவீமாகக் காணப்பட்ட வடக்கின் வேலையில்லாப் பிரச்சினை தற்போது 10 வீதமாக அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் அதிகரித்த நுண்கடன் நிதி நிறுவனாங்களால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல தற்கொலை செய்து கொள்ளும் நிலையில் காணப்படுகின்றன. மக்களின் இந்நிலைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைகளுக்கு சலாம் போடுபவர்களாகப் பாராளுமன்றத்தில் மௌனம் காப்பது வேதனைக்குரியது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி ஏமாற்றி விட்டார்கள் என முதல்லக்கண்ணீர் வடிப்பவர்கள் தற்போது சஜித்தை ஆதரித்து மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றப் போகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

---

## நட்புறவு மையத்தில் 468பேர் தொடர் சிகிச்சை

(கொடிகாமம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் குடும்ப பாலின வன்முறையின் எண்ணிக்கை மிக அதிகளவில் கர்ணப்பட்டமையால் அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நட்புறவு மையம் இரண்டு வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆவணி மாதத்தில் இருந்து 2019 ஆடி வரையான காலப்பகுதியில் 332 பேர் புதியவர்களாக பதிவு செய்யப்பட்டு 468 பேர் தொடர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இங்கு சிகிச்சைக்காக பின்வரும் வழிகளில் பாதிக்கப்பட்டவர்கள் வருகின்றனர்.

1. தாமாக நட்புறவு மையத்தை நாடி வருபவர்கள்.

2. வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டு வருபவர்கள்.

3. பொலிஸ், நீதிமன்றங்களால் அனுப்பப்படுபவர்கள்.

4. சுகாதாரத் தொண்டர்களால் வழிகாட்டப்பட்டு வருபவர்கள் என அடங்குவர்.

இதில் உடல்ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் 05, உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் 163, பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் 217, உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் 250, நடத்தை பிறழ்வு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் 30 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு வருபவர்கள் நட்புறவு மையத்திலுள்ள நட்புறவாளர்களால் அனுசரிக்கப்பட்டு உடனடி சிகிச்சையான நட்புறவாக்கப்பட்டு 332 பேரில் ஆழ்மனது சிகிச்சைக்கு 256 பேர் உள் வாங்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சையின் பிற்பாடு ஏராளமானோர் ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கையை தொடர்கின்றனர். வேறு சிலருக்கு தேவையைப் பொறுத்து மருத்துவ வசதி, சட்ட மருத்துவ வசதி, சமூகநல சேவைகள், சமூகநலத் திணைக்களத்தால் வழங்கப்படும் சமூகத் திட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன. (இ-114)



## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

# கேட்டை நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி விருச்சிகம் ஆகும். விருச்சிகத்தின் அதிபதி செவ்வாய் ஆகும். அதன் சின்னம் தேள் ஆகும். கேட்டை நட்சத்திரத்தின் அதிபதி புதன் ஆவார். அதன் சின்னம் ஆண் மான் ஆகும். எனவே இவர்களிடம் அதிக முன்கோபமும் பிடிவாதமும் உண்டு. இவர்களது பேச்சில் கோபக்குறிகள் தென்படும். பிறரிடம் வம்புச் சண்டைக்குப் போவது இவர்களது இயல்பான குணமாகும். அதே சமயம் மான் போல மென்மையான குணமும் இவுர்களிடம் உண்டு. சந்திரன் நீசமாக இருப்பதால் இவர்களுக்குத் தாய்ப்பாசம், தந்தை பாசம் ஆகிய இரண்டும் குறைவாகவே இருக்கும். ஆனால் இவர்கள் தங்களது குழந்தைகள் மீது அதிக பாசமாக இருப்பார்கள். மனைவி பாசம் சுமாராக இருக்கக்கூடும்.

அடிக்கடி இவர்களுக்குப் பெண்களால் ஏதாவது தொல்லை வந்து கொண்டே இருக்கும். தனது மனைவி மீதும் இவர்கள் அநாவசியமாக சந்தேகப்பட நேரிடும்! இதன் காரணமாக இல்வாழ்வில் அவ்வப்போது சிறு, சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு. இவர்களிடம் ஓரளவு நல்ல கல்வி ஞானம் உண்டு. சிலர் கல்வியில் உயர் பட்டம் பெற்று அரசு வேலையில் அமரக்கூடிய யோகமும் வரக்கூடும்.

பொதுவாக இவர்கள் பூர்வீகத் தொழில் அரசு தொடர்புடைய தொழிலைச் செய்ய நேரலாம். சிலர் கணனி, எலெக்ட்ரோனிக், மெக்கானிக், இரும்பு சம்பந்தமான தொழில் செய்து ஜீவனம் நடத்த நேரிடும்! மேலும் இவர்களுக்குப் பெண்ணாசையும் அதிகமாக இருக்கும். இதன் காரணமாக இவர்களுக்குக் கெட்ட பெயரும் வர இடமுண்டு. சகோதர பாசம் சுமாராக இருக்கும். பெரும்பாலும் இவர்கள் மாநிறத்துடன் சுமாரான அழகுடன் காட்சியளிப்பர். பண விடயத்தில் இவர்கள் நேர்மையாக நடந்து கொள்வர். தர்மசிந்தனை மிகக் குறைவாகவே இருக்கக்கூடும். மனைவிக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்து அவளை ஓரளவு திருப்தியுடன் வாழ வைப்பர் எனலாம். பெரும்பாலும் இவர்கள் சளித்தொல்லை, மூத்திர ரோகம், சுரம், தலைவலி, சீதபேதி முதலியவற்றால் அவதியுற நேரலாம்.





நாவற்குழி மகா வித்தியாலயத்தின் சாரண ஆசிரியர்களும் சாரண மாணவர்களும் ஒன்றிணைந்து நாவற்குழி 300 வீட்டுத்திட்ட அரும்புகள் முன்பள்ளியில் பூச்சிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கருத்தரங்கை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தினர். இந்தக் கருத்தரங்கில் பொதுச் சுகாதார பரிசோதகர் த.பிரபாகரன் வளவாளராக கலந்து கொண்டார். முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அப்பிரதேச குடும்பங்களுக்கு பூச்சிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் சாரண மாணவர்களால் விநியோகிக்கப்பட்டது. இரண்டாம் நாள் நிகழ்வாக மரம் நடப்பட்டது.

(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)


# பாடசாலை பரிசில்நாள்

(கொடிகாமம்)

கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் யே.தர்மதுரை தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக புனர்வாழ்வு உத்தியோகத்தர் மு.கயோதரன், கௌரவ விருந்தினராக நவபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மகாராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# மூளாய் இரண்டாம் வீதி தார் வீதியாகுமா?



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மூளாய் வீதி பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்பட்டாமலுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டனர்.

காரைநகர் தெற்கு பிரதான வீதியிலிருந்து தெற்கு மூளாய் முதலாம் வீதி வரையுள்ள பாதை பல மக்களால் நாளாந்தம் பயன்படுத்தப்படும் வீதியாகும்.

பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமலுள்ளதால் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் இவ் வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கைகள் விடுத்தும் பயனேதும் ஏற்படவில்லை எனவும் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்ட போதும் இவ் வீதி இன்னும் புனரமைப்புச் செய்யப்படாததன் காரணம் என்ன? எனவும் மக்கள் விசனத்துடன் கேள்வியெழுப்பினர்.

எனவே சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள்,தவிசாளர் ஆகியோர் இவ் வேண்டுகோளை கவனத்திற்கெடுத்து அவ்வீதியை தார் வீதியாகப் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-2)

# இராசி பலன்

**04.11.2019**

ஐப்பசி 18, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி காலை 6.27 மணிவரை
திருவோணம் முழுவதும்
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
கோஷ்டாஷ்டமி

கிரகநிலை
சந்திராஷ்டமம்
புநர்பூசம்

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | | | |
| | | | |
| சந் | | | |
| சனி, கேது. குரு | சுக் | சூரி, புத | செவ் |

வளவன்

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், போசனசுகமுண்டு.

**இடபம்:** குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொறுமையால் பெருமை காணும் நாள்.

**மிதுனம்:** எந்த காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வழியில் புகழ்கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம்.

**தனுசு:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்களின் நலன்கருதிய செலவுகள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

# நாட்டில் தங்கள் பரம்பரை ஆள்வதற்காக யாரை வேண்டுமானாலும் கொலை செய்வார்கள்

## மகிந்த அணியை கடுமையாக சாடினார் றிசாத்



(வாழைச்சேனை)

நாட்டில் தங்களது பரம்பரை மன்னர்களாக, அரசியல் தலைவர்களாக இருப்பதற்கு செய்யக் கூடிய அத்தனை சதிகளையும் செய்வார்கள். யாரை வேண்டுமானாலும் கைது செய்வார்கள், கொலை செய்வார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏற்பாட்டில் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஒன்றாய் முன்னோக்கி ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் பொதுக் கூட்டம் வாழைச்சேனை ஹைறாத் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் அவர் மேலும் தெரிவிக்கையில் , ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகம் தோல்வியடையக் கூடாது.

இந்தத் தேர்தலில் நாங்கள் தோல்வியடைந்தால் இனவாதம் வெற்றி பெற்றுவிடும். மதவாதிகள் இந்த நாட்டில் அராஜகத்தை செய்கின்ற, அட்டகாசம் புரிகின்ற, துவேசத்தை கக்குகின்ற, அநியாயத்தை விதிக்கின்ற, எமது சமுதாயத்தை அடிமைப் படுத்த ஆசைப்படுகின்ற, எமது குரலை நசுக்க விரும்புகின்ற கூட்டம் வெற்றி பெற்று விடும்.

நாட்டுப்பற்றோடு, நாட்டு பிளவுபடக்கூடாது என்று ஆசைப் பட்டவர்களோடு இருக்கின்ற எம்மை இன்று இனவாதியாக, மதவாதியாக, பயங்கரவாதியாக, அடிப்படைவாதியாக பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாத கூட்டமான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, எஸ்.பி.திசாநாயக்க, ரத்ன தேரர், மகிந்தானந்தா அளுத்கமகே ஆகியோர் பேசுகின்றார்கள்.

இவ்வாறு இனவாதிகளுடைய கூட்டமைப்பு ஒன்றாக இருந்து பேசுகின்ற பொழுது ஒரு சில முகவர்கள் தங்களது அரசியல் எதிர்பார்ப்பு அல்லது தேசிய பட்டியல் அல்லது தூதுவர் பதவி அல்லது தங்களது இருப்புக்காக நாடு முழுவதும் வந்து இந்த சமுதாயத்தை பிளவுபடுத்த, பிரிப்பதற்கு சதி செய்கின்றார்கள்.

ஹிஸ்புல்லா மீது எங்களுக்கு தனிப்பட்ட கோபம் கிடையாது. மிகவும் மோசமான வேலையைச் செய்கின்றார். கோத்தாவுக்கும் சஜித்திற்கும் இடையே தான் போட்டி என்று தெரியும். கோத்தபாயவுடன் தான் இனவாதிகள், மதவாதிகள், துரோகிகள், அராஜகம் புரிகின்றவர்கள் இருக்கின்றார்கள் என்று தெரிந்தும் கூட அவரை வெல்ல வைப்பதற்காக சதியை எமது மக்களின் வறுமையை பயன்படுத்தி ஒரு சிலரை விலைக்கு வாங்கி அவர்களது கஷ்டங்கள், துன்பங்களை பயன்படுத்தி செயற்பட்டு வருகின்றார்.

புத்தி சுயாதீனமாக செயற்படுகின்றாரா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஏன் இதைச் செய்கின்றார். இன்று இல்லாவிட்டாலும் எமது சமுதாயம் ஒரு நாளும் அவரை மன்னிக்காது. திருந்திக் கொள்ள வேண்டும். இந்தப் பணத்தை, செலவை சமுதாய நலனுக்காக செலவழிக்க வேண்டும். சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்கும் சதி வேலையில் ஒரு பங்காளியாக செயற்பட்டு வருகின்றார்.

கடந்த காலத்தில் மதகுருமார்கள் அட்டகாசம் செய்த போது எந்தத் தண்டனையும் வழங்கவில்லை. இந்த அரசாங்கத்தில் அட்டகாசம் நடைபெற்றது. ஆனால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. அரசியலுக்காக, ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்பதற்காக, அரசியல் இருப்புக்காக, தங்களுடைய பரம்பரை ஆள வேண்டும் என்பதற்காக இந்தத் தேர்தலில் கோத்தபாய வெற்றி பெற்றால் இனி ஒரு ஜனநாயக தேர்தலை காண முடியாது. இந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சி போலவும், அவர்கள் ஆளும் கட்சி போலவும் உள்ளர்கள். அவ்வாறு அராஜகம் புரிகின்றார்கள்.

அச்சமூட்டுகின்றார்கள், ஒரு சில முகவர்களை அனுப்பி பயமுறுத்துகின்றார்கள். தமிழர்களை பயமுறுத்துகின்றார்கள். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இவ்வாறு அராஜகம் புரிகின்றார்கள் என்றால் இவர்கள் வென்று விட்டால் இனி தேர்தலை எதிர்பார்க்காதீர்கள். அரபு நாடுகள் போன்று வாரிசுகளை, பரம்பரையை கொண்டு வந்து இந்த நாட்டில் சிறுபான்மை சமூகம் அச்சத்தோடும் வாழும் நிலையை ஏற்படுத்தி, சிறுபான்மை சமூகத்தின் நிம்மதியை தொலைத்து அடிமைகள் போல நம்மை வாழச் செய்வதற்கு, பர்மா போன்று எமது நாட்டின் பொருளாதாரம் நாசமானாலும் பரவாயில்லை, சமாதானம், சகவாழ்வு அழிந்தாலும் பரவாயில்லை. தங்களது பரம்பரையாள வேண்டும். நாட்டில் மன்னர்களாக, அரசியல் தலைவர்களாக இருப்பதற்கு செய்யக் கூடிய அத்தனை சதிகளையும் செய்வார்கள்.

யாரை வேண்டுமென்றாலும் செய்வார்கள். கொலை செய்வார்கள். இங்கு சட்டம், நீதி இருக் காது. நீதியரசர் ஷிராணியை இரவோடு இரவாக வீட்டுக்கு அனுப்பியவர்கள். ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க முற்பட்ட போது நீதிமன்றம் தவறு என்று சொன்னது. பிரதமரை நியமித்த போது அது தவறு என்றும் நீதிமன்றம் சொன்னது. அந்தளவிற்கு தற்போதைய அரசியல் சட்டம் நேர்மையாக இருந்தது.

இந்த அரசு சட்டத்தை சரியாகப் பயன்படுத்தியதால் நாங்கள் காப்பாற்றப்பட்டோம். ஒரு சில நயவஞ்சகக் கூட்டம் சிறைக்குச் சென்று வந்தமையினால் ஓரளவு அடங்கிப் போய் உள்ளனர்.

எனவே நாங்கள் மிகச் தெளிவாக சிந்தித்து செயற்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்து அமைப்புக்களுடன் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள், இந்து அமைப்புக்களுடனான கலந்துரையாடல் இன்று 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். இந்து சமயப் பேரவையில், அதன் தலைவர் ஈசா னஸ்ரீ.சிவ சக்திகிரீவன் தலை மையில் இடம் பெறும்.

இதில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப் பழை துர்க்கை அம்பாள் தேவஸ் தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகன் ஆகியோர் கலந்து கொள் வர்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் "சமகாலத்தில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள்" என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்குவார். (இ-5)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மனோகரராசன் பூர்விகா
(175 புள்ளி)
யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை




கெங்கேஸ்வரன் மேதவன்
(162 புள்ளி)
சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த உயர் புள்ளிகளைப் பெற்ற கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வங்களை வாழ்த்துவதுடன் அவர்கள் கல்வியில் இன்னும் பல சாதனைகள் புரிய தில்லையம்பதியானை வேண்டுகின்றோம்.

சி.ஆனந்தராஜா குடும்பம்,
தில்லையம்பதி.
(829)

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# சூரன் போர்



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சூரன் போர் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)





தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நேற்று முன்தினம் சூரன்போர் இடம் பெற்றது.
(படங்கள்:- மகாலிங்கம்)





துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் சூரன் போர் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)



வதிரி ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தின் பொன் விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இல்லத் தலைவர் சு.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

# எம்.சி.சி.ஒப்பந்தத்தை இரத்து செய்யுங்கள்

## திருகோணமலை மக்கள் சக்தி கோரிக்கை



(திருமலை)
பொது மக்களின் இடங்களை, அமெரிக்காவிற்கு வழங்கும் எம்.சி.சி.ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறு திருகோணமலை மக்கள் சக்தி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த அமைப்பு, நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை திருகோணமலையில் நடத்தியிருந்தது.

இதன்போதே அவ்வமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது. அக்கட்சி மேலும் கூறியுள்ளதாவது, "தற்போதைய அரசாங்கம் அமெரிக்காவுடன் மேற்கொண்டுள்ள எம்.சி.சி. ஒப்பந்தம், திருகோணமலை மக்களின் எதிர்காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

மேலும் இப்பகுதிகளில் காணப்படுகின்ற அனைத்துக் காணிகளும் பொது மக்களுக்குச் சொந்தமானவை.

ஆனால் இவைகளுக்குரிய உரிமப் பத்திரங்களை மக்களுக்கு வழங்காமல், இன்னும் இன்னல்களை அவர்களுக்கு ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புகளை வெளியிடுகிறோம்.

இதேவேளை அமெரிக்கா இலங்கைக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு இலங்கையின் வளங்களை சூறையாடுவதற்கு தயாராகி வருகிறது.

இலங்கையின் இயற்கை வளங்களில் ஒன்றான திருகோணமலைத் துறைமுகம் அனைத்து வளங்களையும் கொண்டுள்ளது.

இதனாலேயே அமெரிக்கா, இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை செய்து, அதனை சுவீகரிப்பதற்கு முயற்சிக்கின்றது.

அதாவது, இந்த ஒப்பந்தத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் 6 ஆயிரம் காணிகள் பறிபோகும் நிலை தோன்றியுள்ளது. எனவேதான் இந்த ஒப்பந்தத்தை அரசாங்கம் இரத்துச் செய்ய வேண்டும்" என அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# தமிழ்த் தேசிய பாடசாலை கண்டி மண்ணில் உதயமாகும்

## வேலுகுமார் நம்பிக்கை

(கண்டி)
சகல வசதிகளையும்கொண்ட தமிழ்த் தேசிய பாடசாலையொன்று கண்டி மண்ணிலே உதயமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

வேலுகுமாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரான அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் வெற்றிகரமாக இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த எமது கட்சியின் கண்டி மாவட்ட செயற் பாட்டாளர்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன் வரலாற்று வெற்றியை பதிவு செய்வதற்காக இன்னும் நாம் உத்வேகத்துடன் களப் பணியாற்ற முன்வரவேண்டும் என அறைகூவல் விடுக்கின்றேன்.

கண்டி மாவட்டத்தில் நிலவும் இதுவரையில் தீர்வு காணப்படாமல் இழுபறி நிலையிலுள்ள பிரச்சினைகளுக்கு நவம்பர் 18 ஆம் திகதிக்கு பின்னர் துரித கதியில் தீர்வுகள் முன்வைக்கப்படும் என எங்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

அதிலும் குறிப்பாக வீடமைப்பு திட்டம் சார் பிரச்சினைகள் முன்னுரிமை வழங்கி தீர்த்து வைப்பதற்கு அவர் எதிர்பார்க்கின்றார். அந்தவகையில் மஹியாவ மக்களுக்கான வீடமைப்புத் திட்டம், நித்தவல மக்களுக்கான வீடமைப்பு திட்டம் ஆகியன உரியவகையில் நிறைவேற்றப்படும் என்பதுடன், தோட்டப்புகுதிகள்மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியால் முன்வைக்கப்பட்ட பல விடயங்களை தனது தேர்தல் அறிக்கையில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெளியிட்டார்.

இதன்படி தோட்டத் தொழிலாளர்கள் நிச்சயம் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள். குறுகிய மற்றும் நீண்டகாலத்தின் அடிப்படையில் இதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, தொழிலாளர்கள் சொந்தக்காலில் நிற்கும்நிலை உருவாகும் வரை அவர்களுக்கு நாளாந்த வருமானமாக 1500 ரூபா கிடைப்பதை உறுதிப்படுத்துவேன் என்றும் எமது ஜனாதிபதி வேட்பாளர் அறிவித்தார்.

நல்லாட்சியின் கீழ் எமது மக்களுக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வென்றெடுத்துள்ளோம். உரிமைசார் விடயங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இதே வேகத்தில் முன்னோக்கி பயணித்து சமூக மாற்றம் என்ற நிலையை அடைய வேண்டுமானால் எமக்கு இந்த ஆட்சி தொடர வேண்டும். அதற்காக சஜித்தை நிச்சயம் ஜனாதிபதியாக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் எங்கள் அன்னமே வெற்றி நடை போட்டது. 88 ஆயிரத்து 409 மேலதிக வாக்குகளால் மகிந்தவை மண் கவ்வ வைத்தோம். இம்முறை சஜித் வெற்றி நடைபோடுவார். வரலாற்று வெற்றியை உறுதிப்படுத்த வேண்டியது எம் பணியாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காலி வீதியில் விபத்து இரு பெண்கள் உயிரிழப்பு

## சிறுவர்கள் உட்பட ஐவர் காயம்

(அங்குலுகஹ)
காலி - அக்குரஸ்ஸ பிரதான வீதியின் அங்குலுகஹ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் ஐவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சார சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றும் ஆட்டோ ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. 35 மற்றும் 65 வயது பெண்கள் இருவரே இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்களில் இரண்டு சிறுவர்களும் அடங்குவதுடன், இவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விசாரணை அதிகாரிகளுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)
நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சால் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு மரண விசாரணைக்காக வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது.

இதுவரை காலமும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு ஒரு மரண விசாரணைக்கு 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

தற்போது ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 250 | 130 | 200 |
| தக்காளி | 120 | 160 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 140 | 120 | 90 | 160 |
| கரட் | 200 | 200 | 200 | 300 |
| பூசணி | 100 | 70 | 80 | 120 |
| புடோல் | 160 | 100 | 300 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 240 | 120 | 160 | 140 |
| பாகற்காய் | 400 | 380 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 140 | 120 |
| பீற்றூட் | 140 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 300 | 260 | 200 | 200 |
| முருங்கைக்காய் | — | 300 | 300 | 300 |
| போஞ்சி | 150 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 60 | 120 |
| கீரை - 1பிடி | 60 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 45 | 30-50 |
| இராசவள்ளி | — | — | 150 | — |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | — | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 150 | 120 |

# வாக்குச் சீட்டு பாதுகாப்பான பொதிகள் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிப்பு

(கொழும்பு)
தபால் மூல வாக்களிப்புகள் இடம்பெற்ற வாக்குச்சீட்டுக்களை உள்ளடக்கிய பாதுகாப்பான பொதிகள் பல சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதாக தபால் திணைக்கள செயற்பாட்டு பிரிவின் பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தினம் நேற்றாகும்.

அதிகாரிகள் வீடுகளுக்கு சென்று உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளை மாத்திரமே விநியோகிப்பார்கள். இது தவிர தபால் விநியோகம் இடம்பெறாது என்றும் பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் எதிர்வரும் சனிக்கிழமை வரை இடம்பெறும்.

அன்றைய தினத்திலும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காதோர் அருகில் உள்ள தபாலகத்திற்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி அதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணியில் தமது திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 9 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# தமிழரசுக் கட்சிக்கு எதிராக காணாமல் போனவர்களின் உறவுகள் வவுனியாவில் முற்றுகை போராட்டம்





(நெளுக்குளம்)

தமிழரசுகட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா விலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அவர்களது கூட்டம் இடம்பெறும் பகுதிக்கு சென்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 985 நாட்களாக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலேயே குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று முன் னெடுக்கப்பட்டது.

கூட்டம் இடம்பெறும் பகுதிக்குள், நுழைய முற்பட்ட போதிலும் அதற்குப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக கூட்டம் இடம்பெறும் இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திலேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சம்பந்தா 2015 தேர்தலின்போது வடகிழக்கு ஒன்றிணைந்த சமஷ்டிக்கு நீங்கள் உறுதியளித்தீர்கள். இப்போது ஒன்றுபட்ட, ஒருமித்த பிளவுபடாத, பிரிக்கமுடியாத நாட்டுக்குள் தீர்வு வேண்டும் என்று ஏன் அடம் பிடிக்கிறீர்கள்.நீங்கள் ஏன் தமிழர்களிடம் தொடர்ந்து பொய் சொன்னீர்கள்?

சம்பந்தா தமிழ் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க நீங்கள் தமிழர்களை கேட்கவில்லை என்றால் நீங்கள் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்த தகுதியற்றவர்கள். சுமந்திரனே பாராளுமன்றத்தில் பௌத்தத்துக்கு முதலிடம் யாரை கேட்டு கொடுத்தாய்?

சம்பந்தா இலங்கை ஒரு பௌத்த நாடு என்று மோடிக்கு சொல்வதற்கு தமிழர்கள் உங்களுக்கு அனுமதி தந்தார்களா? போன்ற பதாகைகளை தாங்கிய வண்ணம் கோசங்களை எழுப்பியிருந்தனர். (9-299)

# தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம்



(நெளுக்குளம்)

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவை. சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை தலைவர்கள், வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல், கட்சியின் எதிர்கால செயற்பாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (9-299)

# மாந்தை கிழக்கில் தொடரும் காடழிப்பினால் கிராமங்களுக்குள் வரும் காட்டுயானைகள்

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் தொடரும் காடழிப்பு மற்றும் மணல் அகழ்வினால் காட்டில் உள்ள யானை மற்றும் ஏனைய விலங்குகள் கிராமங்களுக்குள் வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறாட்டிகுளம் உழுவன்நரி எருவில் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்களில் ஜீவனோ பாயமாக விவசாயமே காணப்படுகின்றது. தற்போது குறித்த பகுதிகளில் காலபோக நெற்செய்கையும் அதனோடு இணைந்த சிறுதானிய செய்கை மற்றும் தோட்டச்செய்கை என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் குறித்த கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதாவது அடர் காடுகளுக்கு மத்தியில் இவ்வாறு குறித்த கிராமங்கள் காணப்படுவதுடன் மேற்படி கிராமங்களை சூழவுள்ள காடுகளில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள், காடழித்தல் என்பவற்றின் காரணமாக காடுகளில் இருந்த யானைகள் ஊர் மனைகளை நோக்கி வருவதாகவும் இவ்வாறு வருகின்ற யானைகள் தமது பயிர்களை அழித்து வருவதுடன், பெரும் அழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன என்றும் இவ்வாறான யானைகளின் தொல்லையால் மாலை வேளைகளில் அல்லது இரவு வேளைகளில் தமது கிராமத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்ல முடியாதுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள பிரதேச மக்கள் தமது கிராமங்களைச் சூழ யானை வேலிகளை அமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)






வன்னி வரலாற்றில் தொன்மை மிக்க ஆலயமான, முல்லைத்தீவு - குமாரபுரம், ஸ்ரீசித்திரவேலாயுதர் ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்று முன்தினம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

# நான் ஆதரிப்பவர்களுக்கு நானே பொறுப்பு

## டக்ளஸ் தெரிவிப்பு




(பனிக்கன்குளம்)

பிரதான வேட்பாளர்களிடம் இருந்து இரண்டு விதமான தேர்தல் விஞ்ஞாபனங்கள் வந்துள்ளன. இதில் நான் ஆதரிக்கின்ற தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் அந்த அமைப்பிற்கும் நானே பொறுப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மூங்கிலாற்றுப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் மனக்கிடக்கைகளை அறிந்துகொள்வதும் அதற்கு தீர்வு காண்பேன் என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்துக்களை விதைத்துள்ளேன்.

நான் ஆதரிக்கின்ற மொட்டுச் சின்னத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் எங்களுடனும் சம்பந்தப்பட்டது. நான் அதனை ஆதரிக்கின்றேன். அதில் சொல்லப்படாத விடயங்களுக்கும் கூட பொறுப் பெடுத்து அதனையும் நான் செய்விப்பேன் என மேலும் தெரிவித்தார். (9-281)

# தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ரி.ஐ.டியால் விசாரணைக்கு அழைப்பு

(பனிக்கன்குளம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் பொருளாளருமான பீற்றர் இளஞ்செழியனை முன்னிலையாகுமாறு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் அழைப்பாணை வழங்கியுள்ளனர்.

விசாரணை ஒன்றுக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரண்டாம் மாடி புதிய செயலக கட்டடம் ,கொழும்பு-1 எனும் முகவரியில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு 01 இன் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு அவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-281)



ஐக்கிய இராச்சியத்தின் ரட்ணம் பவுண்டேசனின் (Ratnam Foundation) இன் அனுசரணையில் கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் எட்டாவது திறன் வகுப்பறை கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் அ.பங்கயற் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிறுவுநர் மருத்துவர் ரட்ணம் நித்தியானந்தன்,கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன், ஆசிரிய ஆலோசகர் எஸ். குமரன் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். கிளிநொச்சி வலயத்திலேயே எட்டு திறன் வகுப்ப றைகளைக் கொண்ட ஒரே பாடசாலையாக வட்டக்கச்சி ஆரம்ப வித்தியா லயம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.


(படங்கள்-அக்கராயன் செய்தியாளர்)

# புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகாரப்பகிர்வு

## கிளிநொச்சியில் ரணில் தெரிவிப்பு

(பரந்தன்)

**புதிய அரசியலமைப்பினை உருவாக்கி அதனூடாக அதிகாரப்பகிர்வு வேண்டுமானால் மீண்டும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 16 ஆம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்க வேண்டும் என கிளிநொச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நாட்டில் வெள்ளை வான் வருவது கிடையாது, ஆனால் மக்களை தேடி அவசர அம்புலன்ஸ் வருகிறது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டுமா? இல்லையா? என்பதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் மொட்டுக்கு வாக்களித்தால் வெள்ளைவான்மட்டுமே வரும்.

2015 க்கு பின்னர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யலாம், ஊர்வலம் போகலாம், பேசலாம், எழுதலாம் இந்த நிலைமை தொடர வேண்டுமா? வேண்டாமா? நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவற்றை உருவாக்கி சுதந்திரத்தை உருவாக்கியுள்ளோம்.

2015க்கு பின் புதிய அரசியலமைப்பினை ஏற்படுத்த முயற்சித்த போதும் பாராளுமன்றத்தில் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையினால் அதனைக் கொண்டுவர முடியாது போய் விட்டது. ஆனால் புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகாரப் பகிர்வை கொண்டுவர வேண்டுமானால் மக்கள் செய்ய வேண்டியது இரண்டு விடயங்கள்தான். ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்குவது. இரண்டாவது பாராளுமன்றத்தில் 120 க்குமேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை எமக்கு வழங்குவது.

கிளிநொச்சியை அபிவிருத்தி செய்வதற்கு நாம் பல்வேறு திட்டங்களை முன்வைத்துள்ளோம். ஆனையிறவு உப்பளம் புனரமைத்தல், பூநகரியில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் திட்டங்களை ஏற்படுத்துதல், வடக்கு-கிழக்கில் விசேட பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழில் வாய்ப்பினை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மேற்கொள்வோம் என மேலும் தெரிவித்தார். (9-312)

# தென்னியங்குளம்-முழங்காவில் கிராமங்களுக்கான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங்குளத்தில் இருந்து கிளிநொச்சியின் முழங்காவில் கிராமத்திற்கான வீதியினைப் புனரமைத்து போக்குவரத்துகளை ஏற்படுத்துமாறு தென்னியங்குளம் கிராம மக்கள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தென்னியங்குளம் கிராமத்திற்கு அருகில் முழங்காவில் கிராமம் காணப்படுகின்றது. முன்பு பாவிக்கப்பட்ட வீதி தற்போது பற்றைகள் மூடிக் காணப்படுவதன் காரணமாக தென்னியங்குளம் கிராம மக்கள் முழங்காவில் பிரதேசத்திற்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. முழங்காவில் பிரதேசத்துடன் தொடர்புகள் ஏற்படுகின்ற போது பாடசாலை, வைத்தியசாலை மற்றும் சந்தைகளுக்குச் செல்லக்கூடிய நிலைமை ஏற்படும். கடந்த 10 ஆண்டுகளாக தென்னியங்குளத்தில் இருந்து முழங்காவில் நகரத்திற்கான வீதியினைப் புனரமைத்துத் தாருங்கள் என தொடர்ச்சியாக கிராம மக்களினால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (9-350)

# மூவரசர் ஆலயம் திறந்து வைப்பு



(மன்னார்)

மன்னார் பேசாலை சேமக்காலைக்குள் அமைந்துள்ள மூவரசர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது. பேசாலை கிராமத்தின் பங்கு மக்கள் சிலரின் நிதி மூலம் சேமக்காலைக்குள் அமைந்துள்ள குறித்த பழைமை வாய்ந்த வரலாற்று சான்றான ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையில் மரித்த விசுவாசிகள் நினைவு நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பேசாலை பங்குத்தந்தை அருட்திரு தேவராஜா கொடுதோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவிப்பங்குத்தந்தை மற்றும் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த குருக்கள், அருட்கன்னியர்கள், மக்கள் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# தவறணையை அகற்றக்கோரி கிராம மக்கள் போராட்டம்





(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட கைவேலி02 ஆம் வட்டாரப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையை அகற்றுமாறு கோரி நேற்று முன்தினம் அப்பகுதி கிராம மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கள் விற்பனை நிலைய வாசலை மறித்த மக்கள் குடியிருப்புக்குள் கள்விற்பனை நிலையம் வேண்டாம் என்றும் இதனால் சமூகச்சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகவும் பாடசாலை மாணவர்கள் கல்விகற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கள் வியாபாரம் என்று சொல்லிக்கொண்டு கஞ்சா, கசிப்பு,விற்பனை இடம் பெறுகின்றது. இதனால் வீதியால் பெண்கள், மாணவர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் 100 மீற்றருக்குள் பாடசாலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து ஏற்கனவே பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இறுதியில் எங்கள் கிராம மக்கள்,பிள்ளைகள் என ஒன்று திரண்டு தவறணையினை மறித்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்துள்ளோம் என்று தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணை தொடர்பில் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யுமாறும் அதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததையடுத்து போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. (9-281)

# கற்சிலைமடு, கனகரத்தினபுரம் கிராமங்களின் இணைப்புப்பால நிர்மாணப்பணிகள் துரிதகதியில்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கற்சிலைமடு மற்றும் கனகரத்தினபுரம் ஆகிய கிராமங்களை இணைக்கின்ற இணைப்புப் பாலத்தினுடைய நிர்மாணப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

கிராம மக்களின் கோரிக்கைக்கமைய முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் பரிந்துரையில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 40.58 மில்லியன் ரூபாவில் இப்பாலத்தினுடைய நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மிகவும் பின்தங்கிய பகுதியான முத்தையன்கட்டு, இடதுகரைப் பகுதியில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. இங்குள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குமான முக்கியமான பாலமாக பத்துக்கண்பாலம் எனப்படும் பாலம் கடந்த 1974ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருந்ததாகவும் அத்துடன் இப்பகுதியில் வசிக்கின்ற 600 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உபயோகிக்கின்ற மிக முக்கியமானதொரு பாலமாக, குறித்த பத்துக்கண் பாலம் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கும் மேலாக பாதிக்கப் பட்டிருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மழைக்காலத்தில் அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட பத்துக்கண் பாலத்தினைக் கடந்து செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டுவந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக டிசெம்பர் மாதங்களில் நடைபெறும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருந்தனர்.

இது தொடர்பாக தாம் கடந்த காலங்களில் எல்லா முயற்சிகளை எடுத்திருந்தும், பலரிடம் இது தொடர்பில் பேசியிருந்தும் நிதிப்பற்றாக் குறையைக் காரணங்காட்டி செய்யாமல் விடப்பட்டிருந்ததாகவும் தற்போது குறித்த பாலம் புனரமைக்கப் பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (9)




கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் சூரசம்ஹாரம் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது. (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)



வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகங்கள் இடம் பெற்று மங்கல வாத்தியம் முழங்க உள்வீதிவலம் வந்து மயில் வாகனத்தில் வெளிவீதி வலம் வந்த முருகப்பெருமான் சூரனை வதம் செய்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# பாரதம்

## இராணுவப் படைமுகாம்மீது தாக்குதல்; 4 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை



(லக்னோ)

உத்தர பிரதேசம் மாநிலம், ராம்பூர்மாவட்டத்தில்உள்ள துணை இராணுவப் படை முகாமின் மீது கடந்த 2008 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில் 4 பயங்கரவாதிகளுக்கு நேற்று முன்தினம்' மரண தண்டனை விதிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேசம் மாநிலம், ராம்பூர் மாவட்டத்தில் உள்ள துணை இராணுவப் படை முகாமின் மீது கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அதிகாலை சில பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 7 வீரர்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக சிலரை கைது செய்த பொலிஸார் 9 பேர் மீது ராம்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் 4 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளிகள் இம்ரான் ஷாஜாத், முஹம்மது பாரூக், முஹம்மது ஷரிப், சபாவ்தீன் ஆகியோருக்கு மரண தண்டனை விதித்து ராம்பூர் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிபதி சஞ்சய் குமார் தீர்ப்பளித்தார்.

மேலும் இரு குற்றவாளிகளான ஜங் பஹதூருக்கு ஆயுள் தண்டனையும் ஃபைம் என்பவருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இவ்வழக்கில் தொடர்புடைய மேலும் 3 பேருக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ஜ-2)

## இந்திய வரைபடத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி இணைப்பு

(காஷ்மீர்)

மத்திய அரசு வெளியிட்டுள்ள புதிய இந்திய வரைபடத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துடன் கில்கிட்-பல்டிஸ்தான் பகுதி லடாக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த வரைபடத்தை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இந்த வரைப்படத்தின்படி குப்வாரா, பன்டிப்பூர், கன்டேர்பல், ஶ்ரீநகர், பட்காம், புல்வாமா, சோபியான், குல்காம், ரஜோரி, ரம்பான், டோடா, கிஷ்த்வார், சம்பா, கார்கில் ஆகியவை புதிய மாவட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த வரைபடத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரின் முசாராபாத் பகுதி ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துடனும் கில்கிட்-பல்டிஸ்தான் பகுதி லடாக்குடனும் இணைக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டமையைத் தொடர்ந்து அந்த மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நிலவின் தென்துருவத்தில் மீண்டும் தரையிறங்க முயற்சிப்போம்-சிவன்



(டில்லி)

நிலவின் தென் துருவத்தில் மீண்டும் மெல்ல தரை இறங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரோ தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.

இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 50ஆவது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது.

இதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) தலைவர் கே. சிவன் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வைத்தார்.

அதன்பின்னர் உரையாற்றிய அவர், "நீங்கள் அனைவரும் சந்திரயான்-2 திட்டத்தை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தொழில்நுட்பத்தை பொறுத்தமட்டில் விக்ரம் லேண்டரை மெல்ல தரை இறங்க வைக்க முடியாமல் போய் விட்டது.

எனினும் நிலவின் மேற்பரப்பில் இருந்து 300 மீற்றர் தொலைவு வரை எல்லா அமைப்புகளும் சரியாகத்தான் இயங்கின.

எதிர்காலத்தில் நிலவில் மெல்ல தரை இறங்க ஏற்ற வகையில் எல்லாவற்றையும் சரியாக அமைக்க மிகவும் மதிப்புவாய்ந்த தரவுகள் இருக்கின்றன. இஸ்ரோ எதிர்காலத்தில் தனது முழு அனுபவத்தையும் அறிவையும் தொழில்நுட்ப வலிமையையும் இதில் காட்டும் என உறுதியளிக்கிறேன்" என மேலும் தெரிவித்தார்.

மேலும் இதன்போது "நிலவின் தென் துருவத்தில் தரை இறங்க மீண்டும் முயற்சி மேற்கொள்ளப் படுமா?" என கே.சிவனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அவர், "நிச்சயமாக முயற்சிப்போம். சந்திரயான்-2 உடன் கதை முடிந்து விடவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். (ஜ-2)

## ஆப்கானிஸ்தானில் கு
## பத்து மாணவர்கள் ப


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் பத்து பாடசாலை மாணவர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.


அத்துடன், பொது மக்கள் மீதும் இராணுவம் மீதும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இராணுவமும் அவர்களுக்கு



## ஐ.எஸ்.தலைவர் ெ
## முழுமையாக உறுதிப்ப

### ரஷ்யா பரபரப்



(ஐ
ஐ
அல்
உறு
யுறவ
ரோவ
அ
தலை
ரிக்க
அமெ
அறி
இ
மறுக்
இ
அமை
கைய
"
வல்க

## என்னைப் பதவி நீ
## ஜனநாயகத்திற்கு

## ட்ரம்ப் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

என்னைப் பதவி நீக்கம் செய்வதற்காக நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சியினர் முன்வைத்துள்ள தீர்மானம் ஜனநாயகத்துக்கு விரோதமானது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான வாக்காளர்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராக, ஜனநாயகக் கட்சியினர் குறித்த தீர்மானத்தை இயற்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்நிலையில், ஜோ பிடனுக்கு எதிராக ஊழல் விசாரணை நடத்த வேண்டும் என உக்ரேய்ன் அரசாங்கத்தை ட்ரம்ப் மிரட்டியதாகக் கூறப்படுகிறது.



இ
ராக

# வெளிநாடு

## குண்டுத்தாக்குதல்
## பரிதாபமாகப்பலி!



பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் தகார் மாகாணத்திலுள்ள தர்காட் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் பத்து பாடசாலை மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## கொல்லப்பட்டது
## ப்படுத்தப்படவில்லை
### ப்புத் தகவல்

(மொஸ்கோ)

ஐ.எஸ். தீவிரவாதத் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி கொல்லப்பட்டது இன்னமும் உறுதிப்படுத்தவில்லை என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் தெரிவித்தார்.

அண்மையில் ஐ.எஸ். தீவிரவாத தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி, அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இந் நிலையில் இதனை ரஷ்யா ஏற்க மறுக்கிறது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் கூறுகையில்,

"ஐ.எஸ்.தலைவர் பக்தாதி பற்றிய தகவல்கள் போதுமானதாக இல்லை. அவர் கொல்லப்பட்டது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

எங்களது இராணுவம் இது குறித்து உண்மைத்தன்மையை ஆராய்ந்து வருகிறது. அவர்களும் அமெரிக்கா வெளியிட்ட தகவல்களை இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

ஈராக்கில் சட்டவிரோத படையெடுப்பு, ஈராக் அரசின் சரிவு மற்றும் அமெரிக்கர்களால் சிறைகளில் இருந்து பயங்கரவாதிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் ஐ.எஸ். அமைப்பு தலைதூக்கியது. எது எப்படியோ அவர்கள் உருவாக்கியதை அவர்களே அழித்து விட்டார்கள்" எனத் தெரிவித்தார். (ஐ-2)

## நீக்கம் செய்வது
## விரோதமானது



இதனைத் தொடர்ந்து ட்ரம்பிற்கு எதிராக ஜனநாயகக் கட்சியினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## பயங்கரவாதிகள் தாக்குதல் 55 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு !

(பமாகோ)

**மாலி நாட்டில் இராணுவச் சோதனைச் சாவடியில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 55 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.**



ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள மாலி நாடு, அண்மைக் காலமாக பயங்கரவாத அச்சுறுத்தலுக்குள்ளாகியது. இதனால் இராணுவத்தினரும் பொலிஸாரும் தொடர்ந்து பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், எல்லைப்பகுதியில் உள்ள மெனாகா பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 55 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். (ஐ-2)

## அமெரிக்காவில் கழுத்தை இறுக்கி பெண்ணைக்கொன்ற மலைப்பாம்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் 8 அடி நீளம் கொண்ட மலைப்பாம்பு ஒன்று பெண்ணின் கழுத்தை இறுக்கிக் கொன்றது.

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் ஒக்ஸ்போர்ட் அருகேயுள்ள பென்டன் கவுன்டி பகுதியைச் சேர்ந்த பெண் லாரா ஹர்ஸ்ட்(வயது-36). இவர் பாம்புகளை வளர்ப்பதிலும் அவற்றை பராமரிப்பதிலும் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார்.

இந்த நிலையில் அவர் தனது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவரது கழுத்தில் மலைப்பாம்பு ஒன்று சுற்றிய நிலையில் உயிருடன் இருந்தது.

எனவே, அந்தப் பாம்பு கழுத்தை இறுக்கியதில் ஹர்ஸ்ட் உயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2)

## ஈராக்கில் பதுங்கு குழிகள் அழிப்பு

### பிரான்ஸ் படையினர் நடவடிக்கை

(பக்தாத்)

ஈராக்கில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன.

ஈராக்கிலுள்ள பிரான்ஸ் படைவீரர்களினால் இந்த பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டதாக பிரான்ஸ் இராணுவ அமைச்சர் Florence Parly தெரிவித்தார்.

ஈராக்கின் வடகிழக்கு பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போதே இந்த பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன.

அத்துடன், ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் பிரான்ஸ் படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிய வந்தது. (ஐ-2)



## ஈராக் பிரதமர் பதவி விலகல்; நாடாளுமன்றிற்கு திடீர் தேர்தல்

### ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு

(பக்தாத்)

வன்முறைப் போராட்டங்களால் நிலை குலைந்து வரும் ஈராக் நாட்டில், பிரதமர் பதவி விலக முன்வந்துள்ளதால் நாடாளுமன்றத்துக்கு திடீர் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்தார்.

ஈராக் நாடு தொடர் போர்களால் சீரழிவை சந்தித்து வந்த நாடு ஆகும். சதாம் உசேன் ஆட்சிக்குப் பிறகு அங்கு அரசியல் நிலைத்தன்மை இல்லாமல் போனது.

தொடர் போர்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது. வேலையில்லா திண்டாட்டம் தாண்டவமாடி வருகிறது. ஊழலுக்கு குறைவில்லை. இது மக்கள் மத்தியில் அரசின்மீது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக பிரதமர் அதெல் அப்துல் மஹதிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் வெடித்து வருகிறது. இதனால் தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, இறப்பர் குண்டால் சுடுவது அதிகரித்து வருகிறது.


இந் நிலையில் ஈராக் ஜனாதிபதி பர்ஹாம் சாலி நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது,

அரசியல் சாசன நெருக்கடி ஏற்படுவதை தவிர்க்கிற வகையில், அரசியல் சாசனத்துக்குட்பட்டு மாற்று ஏற்பாடு செய்தால், பதவி விலகுவதற்கும், இராஜினாமா கடிதம் அளிப்பதற்கும் தயார் என பிரதமர் கூறி விட்டார்.

நான் தனிப்பட்ட முறையில் அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறேன். அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தேர்தல் மசோதா தாக்கல் செய்து நிறைவேற்றப்படும்.

அதன் பின்னர் நாடாளுமன்றத்துக்கு திடீர் தேர்தல் நடத்தப்படும் எனத் தெரிவித்தார். (ஐ)

# 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம் திருமலை கடற்படை முகாமில் விசாரணை நடத்த அனுமதி



(திருகோணமலை)

திருகோணமலை கடற்படை முகாமில் விசாரணைகளை நடத்துவதற்கு, குற்ற விசாரணைப் பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

2008-2009 காலப்பகுதியில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 பேர் தொடர்பாக தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமையவே திருகோணமலை கடற்படை முகாமில் விசாரணைகளை நடத்துவதற்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 பேரும் இறுதியாகத் தடுத்து வைக்கப்பட்ட திருகோணமலைக் கடற்படை முகாமில், சட்ட வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார ஆய்வாளர்கள், குற்ற விசாரணை அதிகாரிகள் என மூன்று குழுக்களை ஆய்வு நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

அதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் இந்த ஆய்வை நடத்தி, இந்தக் குழுக்கள் குற்ற விசாரணைப் பிரிவிடம் அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டது. (இ-7)

# கண்நோய் பரவல் அதிகரிப்பு

## மக்களே! அவதானம்

(கொழும்பு)

**நாட்டின் பல்வேறு இடங்களிலும் பரவலாக கண்நோயின் தாக்கம் காணப்படுவதாகவும் இது குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தேசிய கண்வைத்தியசாலையின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே அறிவுறுத்தினார்.**

இதேநேரம் மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கண் சிவப்பு நிறமாகுதல் கண்ணில் வலி ஏற்படுதல் மற்றும் கண்ணீர் வருதல் முதலான நிலைமைகள் இந்தக் கண்நோயின் தன்மைகளாகும் எனவும் அறிவுறுத்தினார். (இ-7)

# தேர்தலில் வெற்றி பெறுவதற்கு சஹ்ரானைப் பயன்படுத்திய ராஜபக்ஷ குடும்பத்தினர்

## அமீர் அலி பகீர் தகவல்



(வாழைச்சேனை)

சிறுபான்மை மக்களை தள்ளி வைத்துவிட்டு இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி வரமுடியாது எனும் உண்மையை இந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு சொல்லி அவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும் என்று விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாழைச்சேனையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தினர் வெற்றி பெறுவதற்காக சஹ்ரான் எனும் குண்டுதாரியைப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களைப் பிரித்து, முஸ்லிம்களை ஓரங்கட்டி தமிழ் கிறிஸ்தவ மக்களை அவர்கள் பக்கமெடுத்து அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்காக தீட்டிய திட்டம்தான் ஏப்ரல் குண்டுத்தாக்குதலாகும்.

இந்த நாட்டில் 11 ஆயிரம் பேர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இருக்கின்றார்கள். 119 தடவைகள் சஹ்ரானுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் அவரைப் பிடிக்கவில்லை. எங்களுக்கும், உங்களுக்கும் சிறிய பிரச்சினை என்றால் எத்தனை தடவை பொலிஸார், புலனாய்வுத்துறையினர் தேடிவருவார்கள். ஆனால் இந்த சஹ்ரானை தேடவில்லை. ஏனென்றால் சஹ்ரான் இருந்தது அவர்களுடைய பாதுகாப்பில் தான்.

அவர்கள் முஸ்லிம்கள் எல்லோரையும் பயங்கரவாதிகளாக காட்டப் பார்த்தார்கள், கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளென்று வேண்டுமென்றே அவர்கள் அடையாளப்படுத்தினார்கள். இந்தத் தேர்தலிலே அவர்கள் அமைத்த வியூகம் இதுதான்.

இம்முறை தேர்தலில் முஸ்லிம்கள் எமக்கு வாக்களிக்க மாட்டார்கள். அவர்களைத் தள்ளி வைப்பதற்கான ஒரு தந்திரோபாயம்தான் இவ்வாறான நாடகமாகும். தமிழ், கிறிஸ்தவ மக்களிடத்திலிருந்தும் இந்த முஸ்லிம் சமூகத்தைப் பிரிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் திட்டமிட்டுக் கொண்ட சதிதான் இவைகள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தையின் கவனம்

ஒருத்தர் ரொம்ப அவசரமாக போய்க்கொண்டிருந்தார். "எங்கே சேர் போறீங்க?" என்று கேட்டேன். "எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு குழந்தை பிறந்திருக்கிறதாக செய்தி வந்தது. அதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருக்கிறேன் பார்த்துக் கொண்டு வரலாம்" என்று சொன்னார். அப்படியென்றால் கொஞ்சம் இப்படி உட்காருங்க சேர். சில விபரம் எல்லாம் சொல்கிறேன். கேட்டுக்கிட்டுப் போங்க!" என்றார்.

உட்கார்ந்தார். சொல்ல ஆரம்பித்தேன். புதுசா பிறந்திருக்கின்ற ஒரு குழந்தையைப் பார்க்கப் போறது அது சாதாரண விடயமல்ல. ஆகவே ரொம்பவும் கவனமாக நடந்துக்கனும்! புதுக்குழந்தைக்கு நோய் சுலபமாக தொற்றும். முக்கியமாக காற்று மூலமாக பரவுற நோய்கள் சுலபமாக தொற்றும். அதனாலே நமக்கு உடம்பு சரியில்லை என்றால் குழந்தையை விட்டு கொஞ்சம் தள்ளியே இருப்பது தான் நல்லது.

பெரியவர்களைப் பொறுத்தவரைக்கும் சாதாரணமாக உள்ள ஒரு கிருமி கூட குழந்தையைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப மோசமான ஒரு கிருமியாக இருக்கும். சில வெளிநாடுகளில் எப்படி தெரியுமா? பிறந்த குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிற ஒரு "ரூமுக்கு போகனும் என்றால் போறவங்க முகமூடி (Mask) போட்டுக்கனும். காலணிகளை மாத்திக்கனும். அவ்வளவு சுத்தமாக உள்ளே போய் பார்த்துவிட்டு வரனும்.

பொதுவாக சில ஆஸ்பத்திரிகளிலே பார்த்தீர்கள் என்றால்.. பார்வையாளர்கள் நேரத்திலே (Visiting Hours) தாயை விட்டுக் குழந்தையை தனியாக பிரிச்சு வைத்திடுவாங்க! எதுக்கு என்று நினைக்கின்றீர்கள்? அந்த நேரம் பலபேர் வருவாங்க... போவாங்க... அவங்க கை கால் சுத்தமா இருக்காது. சுத்தமில்லாத கைகள் மூலமாக கிருமிகள் பரவும். சுத்தமில்லாத கை என்றால் மண், தூசு படிஞ்சிருக்கிற கை மட்டும் தான்னு அர்த்தமில்லை.

சாலையிலே கையை வீசிக்கொண்டு நடந்து வருகிறவர்கள் குழந்தையைப் பொறுத்தவரைக்கும் அது கூட சுத்தமில்லாத கைதான்! தாயைத் தவிர மற்றவர்கள் குழந்தையை தூக்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. தாய்கூட அளவோட கொஞ்சுவதோடு நிறுத்திக்கனும்.

புதுசா ஒரு குழந்தையை பெற்றிருக்கிற பொண்ணுகிட்ட மத்த தாய்மார்கள் ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

குழந்தையை அப்படி வளர்க்கனும். இப்படி வளர்க்க வேணும் என்று ஏதாவது "அட்வைஸ் பண்ணிக்கொண்டு இருப்பார்கள்!" இப்படி "ஓவராக அட்வைஸ் பண்றது அந்தப் பெண்ணை குழப்பி விட்டு விடும். Confuse பண்ணிவிடும். அதனாலே அப்படியெல்லாம் செய்யக்கூடாது! அந்தப் பெண்ணே ஏதாச்சும் கேட்டாக் கூட டாக்டர் சொல்ல வேண்டிய விபரங்களையெல்லாம் நாமே சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

புதிதாகப் பிறந்திருக்கின்ற குழந்தையை மட்டுமல்ல... ஒரு நோயாளிக் குழந்தையைப் பார்க்கப் போவது என்றாலும் ரொம்ப எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு தின்பண்டமோ, விளையாட்டுப் பொருட்களோ நாங்கள் வாங்கிக்கொண்டு போவதாக வைத்துக் கொள்வோம். அதை நேராகக் கொண்டு போய் அந்தக் குழந்தையிடம் கொடுக்கக் கூடாது. அந்தப் பிள்ளையின் அப்பா, அம்மாவிடம் இரகசியமாகக் கொடுக்க வேண்டும். அவர்கள் முடிவு செய்வார்கள் அதைக் கொடுக்கலாமா? வேண்டாமா? என்று. அவர்களுக்குத்தான் தெரியும் அந்தப் பிள்ளையின் மனதும் உடம்பும்.

உங்களுடைய அக்கறையைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டு குழந்தை வாயில் எதையும் போடாதீர்கள். போகும் போது உங்கள் வீட்டுக் குழந்தையையும் அழைத்துக்கொண்டு போகாதீர்கள். இந்தக் குழந்தை நோயை வாங்கிக் கொண்டு வரும். அல்லது புதிதாக ஒரு நோயை அந்தக் குழந்தைக்குக் கொடுத்து விட்டு வரும். என்னதான் உங்களுக்குப் பழக்கமான குழந்தையாக இருந்தாலும் அதற்கு விருப்பம் இல்லையென்றால் பேசாதீர்கள். அங்கே போய் அவர்கள் பாடசாலையை ஞாபகப்படுத்திக்கொண்டு இருக்காதீர்கள். நோயில் இருக்கும் போது அது பாடசாலையைப் பற்றி பேச விரும்பாது. வைத்தியசாலையை விட்டுப் போகும்போது குழந்தையிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டும் என்று அவசியம் இல்லை. அந்தப்பிள்ளையின் அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள். என்னிடம் சொல்லவில்லை என்று அது கோபித்துக் கொள்ளாது. சமூக சம்பிரதாயத்தைப்பற்றி அது கவலைப்படுவதில்லை.

இப்படி எல்லா விபரமும் என் எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம் சொல்லி முடித்தேன். ரொம்ப நன்றி என்று சொல்லிவிட்டு அவர் புறப்பட்டார். குழந்தைகள் கொஞ்சம் வளரும் வரைக்கும் தான் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று இல்லை. வளர்ந்த பிறகு இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒரு பையன் பாடசாலையிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தான். முகம் பூராகவும் நகத்தாலே கீறியிருந்தது. அப்பா பார்த்து பயந்து விட்டார். "யார்டா உன்னை இப்படிச் செய்தது என்றார்!" என் கூட படிக்கின்ற இன்னொரு பையன் என்றான். நாளைக்கு உன்கூட பாடசாலைக்கு வாறேன். நீ எனக்கு அவனை அடையாளம் காட்ட முடியுமா? என்றார் அப்பா. "அது ரொம்ப சுலபம் என்றான் பையன்" எப்படி என்றார். "அவன் காது ஒன்றை கையோட எடுத்துவிட்டு வந்திருக்கின்றேன்" என்றான் பையன்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 28.10.2019 - 15.11.2020



**எதை எந்த நேரத்தில் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்த மீன இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிநாதன் குரு என்பதால், செல்வாக்கு மிக்கவர்களாக விளங்குவீர்கள். சிறு பிரச்சினைகள் வந்தாலும் அதிக கவலைப்படுவீர்கள். யாரையும் புண்படுத்தக் கூடாது என்ற எண்ணம் உங்கள் மனதில் இருக்கும். ஆசை அதிகம் கொண்டவர்களாக இருந்தாலும், ஓசைப்படாமலேயே நல்ல காரியங்கள் பலவற்றையும் முன்னின்று நடத்துவீர்கள். இல்லம் வருப்வர்களை இன்முகத்தோடு உபசரிப்பீர்

தொல்லை அகலும். அலுவலகத்தில் இருந்த மந்தநிலை மாறி இனி சிந்தை கவரும் விதம் பணிபுரியப் போகிறீர்கள். இல்லம் கட்டிக் குடியேறுவது முதல் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறவேண்டுமானால் அனைத்தும் குருவின் கையில்தான் இருக்கிறது. ஜீவன ஸ்தானம் என்றும், தொழில் ஸ்தானம் என்றும் கருதப்படும் இடத்தில் குரு சஞ்சரித்தாலும், மற்றபலம் வாய்ந்த சனி மற்றும் கேதுவோடு இணைந்திருக்கிறார். எனவே அவற்றின் கடுமை ஒருபுறம் குறைந்தாலும், அவைகள் செய்யும் பலன்கள் குறையாது.

அதே நேரம் சனி, கேது ஆகிய கிரகங்கள் பார்க்கும் இடம் கடுமையாக இருக்கும். அந்தந்த ஸ்தானங்களுக்குரிய பலன்கள் எல்லாம் எதிர்பார்த்தபடி கிடைக்காது. அந்த அடிப்படையில் விரயஸ்தானத்தைச் சனியும், கேதுவும் பார்ப்பதால் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். அதை சுப விரயங்களாக மாற்றிக்கொள்ளுங்கள். அவர்களோடு குரு இணைந்து சஞ்சரிப்பதால் அதன் கெடுபலன் ஓரளவு குறையும்.

**தனுசு குருவின் சஞ்சாரம்**

இப்பொழுது பெயர்ச்சியாகும் குரு 28.10.2019 முதல் 15.11.2020 வரை தனுசு இராசியில் சஞ்சரித்தாலும், இடையில் 27.3.2020 முதல் 7.7.2020 வரை மகர

கம், தொழில் ஆகிய அனைத்து வழிகளிலும் நன்மைகள் நடந்து ஆச்சரியப்பட வைக்கப் போகிறது. குறிப்பாக கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தாராளமாகச் செலவிட ஏராளமான தொகையும் வந்து கொண்டேயிருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகவில்லையே என்ற கவலை மாறும். ஒரு காரியத்தைச் செய்ய பணத்தை வைத்துக்கொண்டு செய்யவேண்டுமென்று இனி நினைக்க வேண்டாம். காரியத்தை தொடங்கி விட்டால் காசு பணம் தானே வந்து சேரும். அதுதான் குரு பார்வைக்கு கிடைத்த வெற்றியாகும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேர வேண்டும். எனவே ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். தாய்வழி உறவினர்களால் தகுந்த பலன் கிடைக்கும். தாயின் உடல் நலமும் சீராகும். கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். படிப்பில் இருந்த தடை அகல திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுப்பதோடு கலைமகளையும் கைகூப்பி வணங்குங்கள்.

குருவின் பார்வை 6ஆம் இடத்தில் பதி

முயற்சிகளில் தடைகளும், தாமதங்களும் அதிகரிக்கும். பிறரை நம்பிச்செய்த முயற்சிகளில் நல்ல முடிவு ஏற்படாது. நம்பிக்கைக்குரியவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். சந்தர்ப்பங்கள் சாதமாக அமைந்தாலும், அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இந்தக் குருப்பெயர்ச்சி இனிய பெயர்ச்சியாக அமைய வியாழன் தோறும் குரு பகவானை வழிபட்டு வருவதோடு தஞ்சை மாவட்டம் ஆலங்குடி தட்சிணாமூர்த்தி, தென்குடி திட்டை ராஜகுரு, பட்டமங்கலம் திசைமாறிய தட்சிணாமூர்த்தி ஆகிய மூன்றையும் ஒருசேர வணங்கினால் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.

**குருவின் வக்கிர காலம்!**

13.5.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியிலும், மகர இராசியிலுமாக குரு வக்கிரம் பெறுகிறார். இந்த காலகட்டம் உங்களுக்கு ஒரு இனிய நற்பலன்கள் நடைபெறும் காலமாக அமையும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த மந்த நிலை மாறும். குடும்பத்தில் ஒருவரையொருவர்

# பத்தில் வந்த குருபகவான்; பதவியில் மாற்றம் உருவாகும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கள். சாதனையாளர்களிடம் மட்டுமல்லாமல், சராசரி மனிதர்களிடம் கூட நீங்கள் ஆலோசனை கேட்பீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று எண்ணுவீர்கள். இப்படிப்பட்ட குணங்களைக் கொண்ட உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படியிருக்கின்றது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

தனுசு இராசியில் அடியெடுத்து வைக்கும் குருபகவான் உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்திற்கு வரப்போகிறார். உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் குருபகவான். பொதுவாக 10இல் குரு வந்தால் பதவி பறிபோகும் என்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் அதற்காக பயப்படத் தேவையில்லை. உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்கும் இடம், அதைப் பார்க்கும் கிரகம், நடக்கும் திசாபுத்தி இவற்றிற்கேற்ப நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வரலாம். சுய ஜாதகத்தை ஒரு முறை புரட்டிப் பார்த்தால் உண்மைகள் தெரியவரும்.

பொதுவாக உங்கள் இராசிக்கும், 10 ஆம் வீட்டிற்கும் அதிபதி என்பதால், அதற்குரிய ஆதிபத்தியங்களைச் சிறப்பாக செய்ய காத்திருப்பார் என்றே நம்பலாம். நம்பிக்கைகள் நடைபெற வேண்டுமானால் அவரை வழிபட வேண்டும். சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்றும் அனுகூலமான நேரத்தில் வழிபட்டு வரவேண்டும்.

முதல் பாவம் என்பது உடல், உயிர், உருவமைப்பு தேகநலன், பிறந்த இடம், உங்கள் குணம், தோற்றப்பொலிவு, கௌரவம், மனநிலை, ஆயுள், ஆரோக்கியம், தெய்வபக்தி ஆகியவற்றைக் குறிக்கும் இடமாக அமைகின்றது. 10ஆம் இடம் என்பது தொழில், உத்தியோகம், கர்ம ஸ்தானம், அரசு பணி, சேவை, உயர்ந்த நிலையில் இருத்தல், முன்னேற்றம், செல்வந்தர்களின் உதவி, அதிகார தோரணை, திரவியம் தேடுதல் ஆகியவற்றை குறிக்கும் இடங்களாகும். மேற்கண்ட ஆதிபத்யங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற குருபகவான் வழிவகுத்துக்கொடுப்பார்.

இதுவரை இருந்த ஆரோக்கியத்

இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 13.5.2020 முதல் 9.9.2020 வரை குரு வக்கிர இயக்கத் தில் இருக்கிறார். முதலில் மகர இராசியில் வக்கிரம் பெறுகிறார். பிறகு தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். குரு பகவானுக்கு மகர இராசி நீச்ச வீடாகும். உங்களைப் பொறுத்தவரை மகரத்தில் சஞ்சரிக்கும் குரு சப்தம பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பார். எனவே மகரத்தில் சஞ்சரிக்கும் சில மாதங்களில் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் வந்து சேரப்போகிறது. குறிப்பாக வெளிநாட்டு முயற்சி புதிய தொழில் வாய்ப்புகளும் உருவாகலாம்.

தொழில் ஸ்தானாதிபதியாக விளங்கும் குருபகவான் நீச்சம்பெறுவது நன்மை தரும் என்று நீங்கள் நினைக்கலாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் குரு பகவான். எனவே அவர் நீச்சம் பெறுவது ஒரு வகைக்கு நன்மைதான். இதன் விளைவாக உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு வேளை விட்டு விலகினால் உடனடியாக மறுவேலை கிடைத்துவிடும். ஆனால் வேலைப்பளு அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. மேல் அதிகாரிகளின் வெறுப்பால் அதிக பணிச்சுமை உங்களுக்கு ஏற்படும். இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு நீங்கள் பொறுமையாக செயற்பட்டால் ஏப்ரல் மாதத்திற்கு மேல் எண்ணற்ற நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரும்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குருபகவான், உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். குருவின் பார்வை 2ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப ஸ்தானம் பலப்படுகிறது. குடும்பத்தில் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். சுபகாரியப் பேச்சுக்களும் நல்ல முடிவிற்கு வரலாம். பொதுவாக வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், வாகனம், எதிர்ப்பு, வியாதி, கடன், உத்தியோ

வதால் பகை வெல்லக்கூடிய ஆற்றல் உங்களுக்கு வந்து சேரும். எதிரிகள் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் எதிரிகளின் பலம் குறையும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும். புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது தானாகவே கிடைக்கும். பணி புரியும் இடத்தில் சக பணியாளர்களுடன் ஏற்பட்ட தொல்லை அகலும். இதுவரை வீடு, வாகனம் வாங்க விண்ணப்பித்திருந்த இடத்தில் சலுகைகள் கிடைக்கும். தலைமைப் பதவிகள் கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். அதேநேரத்தில் பணியில் இருந்தும் நீக்கப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புகள் கைகூடி வரும். இருப்பினும் குரு பகவான் அருளால் முன்னேற்றம் கூட தாம்பத்ய தட்சிணாமூர்த்தி படத்தை இல்லத்து பூஜையறையில் வைத்து குருகவசம் பாடி வழிபட்டு வந்தால் குறைகள் அகலும்.

**மகர குருவின் சஞ்சாரம்**




23.7.2020 முதல் 7.7.2020 வரை மகர இராசியில் குரு சஞ்சரிக்கிறார். இதற்கிடையில் 13.5.2020 முதல் குரு பகவான் மகர இராசிக்குள் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். குரு நீச்சம் பெற்றிருந்தாலும், வலிமை இழந்திருந்தாலும் அதன் பார்வைக்கு பலன் உண்டு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு நீச்சம் பெறுவதால் இக் காலம் ஒரு பொற்காலமாக அமையும். இருப்பினும் இளைய சகோதரத்தோடு பிரச்சினைகள் ஏற்படலாம். வெளிநாட்டு

புரிந்து கொண்டு செயற்படுங்கள். அப்போது தான் பிரச்சினைகளை தவிர்க்க முடியும். இதுவரை நடைபெறாத ஒருசில காரியங்கள் இப்பொழுது நடைபெறலாம். திடீர் மாற்றங்கள் திகைக்கவும் வைக்கும். தித்திக்கவும் வைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். வெளிநாட்டு அழைப்புகள் வருவது ஆச்சரியம் தரும். எந்த ஒரு செயலையும் செய்யும் போது, ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்தால்தான் வெற்றிவாய்ப்பு கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய நேரம் இது. கவனக்குறைவு இல்லாமல் பணிபுரிந்தால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்கள் திருப்தியளிக்காத விதத்தில் அமையும். வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிச்செல்ல வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படும். பொருளாதார பற்றாக்குறை பட்ஜெட்டே மேலோங்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் சொல்வதன் மூலம் முன்னேற்றத்தில் குறுக்கீடுகள் ஏற்படும். பாகப்பிரிவினைகளில் தாய் வழி ஆதரவு குறையலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. உணர்ச்சி வசப்பட்டு பேசுவதைத் தவிர்த்து உள்ளன்போடு பேசுவதன் மூலமே எல்லா நாட்களையும் இனிய நாட்களாக மாற்றியமைத்துக் கொள்ள இயலும்.

சுப விரயங்களைச் செய்வதன் மூலம் வீண் விரயங்களிலிருந்து விடுபடலாம். குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களுக்கும் உரிய ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வாருங்கள்.

(முற்றும்)


# கொழும்பை வந்தடைந்தது சரக்குக் கப்பல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு முற்றுப்புள்ளி!

(கொழும்பு)

எரிவாயு தட்டுப்பாடு இன்னும் இரண்டு நாட்களுக்குள் தீர்ந்து விடும் என அரசாங்கம் அறிவித்தது.

3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றியபடி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மும்பையிலிருந்து சரக்குக் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

துறைமுகத்திலிருந்தே நாடு முழுவதுமுள்ள முகவர்களுக்கு விநியோகம் நடைபெறும் என தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவித்தார்.



கடந்த மாத தொடக்கத்தில் சவுதி அரேபியாவிற்கு அண்மையில் செங்கடலில் ஈரானிய எண்ணெய் ராங்கர் ஒன்று தாக்குதலுக்குள்ளான பின்னர் எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அந்தச் சம்பவத்தின் பின்னர், அதிகமான தாக்குதல்களுக்கு பயந்து எரிவாயு ராங்கர்கள் இப்பகுதியைத் தவிர்த்தன என்றும் இதனால் கொழும்பை அடைவதில் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

கொழும்பு நோக்கிப் பயணித்த பல எரிவாயு ராங்கர்கள் மும்பைக்கு திருப்பி விடப்பட்டதோடு, துரதிர்ஷ்டவசமாக இந்திய கடற்கரையிலிருந்து அண்மையில் ஏற்பட்ட சூறாவளி நிலைமை காரணமாக அவர்களால் கொழும்புக்கு வரமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை அதிக விலையில் விற்பனை செய்த 37 முகவர்கள் மீது நுகர்வோர் விவகார ஆணையம் சட்ட நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இரண்டு எரிவாயு ராங்கர்கள் அடுத்த வாரம் கொழும்பு துறைமுகத்திற்கு வரவுள்ளதாகவும் அதன் பின்னர் முழு எரிவாயு விநியோகமும் இயல்பாக்கப்படும் என்றும் தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவித்தார். (இ-7)

# மிலேனியம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அவசரப்படுவதால் அரசு மீது பாரிய சந்தேகம்

## ரில்வின் வெளிப்படுத்தல்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள தருணத்தில் அமெரிக்காவின் மிலேனியம் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை விரைவாக அவசரமாக கைச்சாத்திட அரசாங்கம் முயற்சிப்பது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறித்த ஒப்பந்தம் முழுமையாக பாராளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தினார்.**



மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தில் பெருநகர அபிவிருத்தி மற்றும் காணி முகாமைத்துவம் உள்ளிட்ட இரு பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் காணி தொடர்பில் முன்னெடுக்கும் தீர்மானங்களை இந்த நிறுவனமே மேற்கொள்ளும். காணி விவகார விடயங்களுக்குள் சந்தேகத்திற்கிடமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அரச காணிகளை தனியாருக்கு விற்கும் நிலைமை காணப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தில் திருட்டுத்தனமாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டமையால் பாரிய விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

எட்கா ஒப்பந்தத்தில் இன்று நாட்டில் இறையாண்மையைப் பற்றி கருத்துரைக்கும் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவே கைச்சாத்திட்டார். எட்கா ஒப்பந்தத்தை நடப்பு அரசாங்கம் நீடித்துக்கொண்டுள்ளது.

அரசாங்கம் அவசரமான முறையில் மிலேனியம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இரு தரப்பினரும் இரகசியமான முறையில் ஒப்பந்தத்தை கைச்சாத்திட முயற்சிக்கின்றனர். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# சஜித் பெண்களுக்கு முன்னுரிமை

## ரோசி மகிழ்ச்சி



(ஏறாவூர்)

சஜித் பிரேமதாஸ அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்களுக்கான 10 அம்சங்களை முன் வைத்துள்ளார். அந்த 10 அம்சங்களும் வெறுமனே தேர்தலுக்கான முன்வைப்பு அல்ல. அது இலங்கை நாட்டில் நிரந்தரமாக பேணப்படவேண்டிய விடயங்களாகும் என கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோசி சேனநாயக்க தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, மட்டக்களப்பு மாவட்டம் பெரிய போரதீவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜலானி மற்றும் அமைச்சர் அலிசாஹிர் மௌலானா, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ரோசி சேனநாயக்க, பெண்களுக்கான சுயாதீனமான ஒரு ஆணைக்குழு அமைத்தல். அதனூடாக பாகுபாடின்றி செயற்பாடுகளை முன்னெடுத்தல், தனியார் மற்றும் அரச அமைப்புக்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல், பொதுவாக பெண்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இந்த ஆணைக்குழுவினூடாக தீர்வுகாணுதல், சட்டம் மற்றும் நீதி விடயங்கள் உட்பட அனைத்து விடயங்களிலும் பெண்கள் சமமாக நடத்தப்படுவதோடு, நிவாரணங்களைப் பெறுவதற்குரிய வழிமுறையை உருவாக்கி பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

சுயாதீன சபைகள் மற்றும், தீர்ப்பாயங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டு, பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அடிப்படையில் ஏற்படுத்தப்படும். பொலிஸ், நீதித்துறை, சட்டசேவைகளுக்கான விடயங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு பெண்கள் அதிகாரம் பெறுவார்கள்.

பெண்கள் எளிதில் அணுகக்கூடிய சட்டங்களை வைத்து, பெண்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகின்ற நேரத்தில், இலவசமாக வாதிடுவதற்கு சட்டத்தரணிகளை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பெண்களின் பொருளாதாரம், பெண்களின் வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில், எதிர்காலத்தில் பெண்களை முன்னுரிமைப்படுத்தி அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல். சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கும், முறைசாரா தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு, காப்பீட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உதவிக்கரம் நீட்டவுள்ளோம்.

முன்பள்ளி தொடக்கம், அனைத்து கல்வி நடவடிக்கைகளிலும் பாலின சமத்துவம் பேணப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கும், சிறப்புத் தேர்ச்சி பெரும் சிறுவர்களுக்கும், அதற்கேற்ப அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

பெண்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு பாராளுமன்றத்திலும், மாகாண சபையிலும், உள்ளூராட்சி சபைகளிலும், பெண்களுக்கு 25 வீத இட ஒதுக்கீடு வழங்கப்படும். எந்தவகையிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளற்ற சமுதாயம் உருவாக்கப்படும், அதற்குரிய பாதுகாப்புக்கள் நாட்டில் ஏற்படுத்தப்படும்.

போரால் கணவனை இழந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும், வீடமைப்பு, கடன்வசதி, வாழ்வாதாரம் போன்ற உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தன்னிறைவான குடும்பங்களை உருவாக்கும் பொருட்டு சிறந்த சமுதாய நெறிமுறைகள் கட்டியெழுப்பப்படும். எனவே அனைவரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அன்னம் சின்னத்திற்கு வாக்களித்து நமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டிற்கு ஜனாதிபதியாக்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# நான் ஒருபோதும் தாய்நாட்டை காட்டிக் கொடுக்கமாட்டேன்-சஜித்

(மாவெனெல்ல)

வேறு நாடுகளின் சட்ட திட்டங்களை இந்நாட்டில் அமுல்படுத்த நான் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டேன் என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாவனெல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஒருபோதும் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வென்னப்புவவில் சித்திரவதைக்கூடம்

## ◆ அதிர்ச்சி தரும் காணொலிகள் மீட்பு

## ◆ தலைமறைவானவர்களைத் தேடி பொலிஸார் வலை வீச்சு

(வென்னப்புவ)

**வென்னப்புவ பகுதியில் இரகசிய சித்திரவதைக் கூடமொன்றை நடத்தியதாக கூறப்படும் விவகாரம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர். பிரதான சந்தேகநபரான 'ஒலுமார'வின் நண்பர் என்று கூறப்படும் ரன்மா சாமாரவையே இவ்வாறு கைது செய்யப்பட்டார். தலைமறைவாகவுள்ள அந்தக் கும்பலின் ஏனைய உறுப்பினர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.**

வென்னப்புவவில் இரகசிய சித்திரவதைக்கூடமொன்று இயங்கி வருவதாக அண்மையில் தகவல் வெளியாகியிருந்தது.

கொலை, போதைவஸ்து கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத காரியங்களில் ஈடுபடும் குண்டர்களால் இந்த சித்திரவதைக்கூடம் இயக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

கப்பம் பெறுவதற்காக கடத்தப்படுபவர்கள் இந்த இரகசிய சித்திரவதைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டது.

இந்தக் கும்பலின் தலைவனான ஒலுமாரவை சில தினங்களின் முன்னர் ஹெரோயினுடன் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டபோது, ஒலுமாரவின் கையடக்கத் தொலைபேசியை பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது, கைய்டக்கத் தொலைபேசியில் இருந்த காணொளிகள் சில பொலிஸாரை அதிர்ச்சியடைய வைத்தன. சிலர் அறையொன்றிற்குள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட காட்சிகளே அதில் இருந்தன.

இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணையிலேயே, சித்திரவதைக்கூடம் குறித்து தகவல் வெளியானது.

அந்தக் காணொலியின் அடிப்படையிலேயே ரன்மா சாமார எனும் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அந்தக் குழுவின் மேலும் 7 குண்டர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

ரன் சாமார என்ற நபருக்கு எதிராக ஒரு கொலை, நபர்களைத் தாக்கியமை மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளில் சிலாபம் மேல் நீதிமன்றம் மற்றும் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




உங்கள் வலம்புரி Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk Viber : 076 636 3378
E-mail : valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
T.P : 021 221 7603 Fax : 021 222 7829

20ஆவது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேவையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

மரண அறிவித்தல்
கண்ணீர் அஞ்சலி
நினைவஞ்சலி

ஆகிய விளம்பரங்கள் வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள வலம்புரி 20ஆவது ஆண்டு நிறைவில் இன்னும் புதுப் பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# மாகாணத் தேர்தலை நடத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அறிவிக்க வேண்டும்

## கபே வலியுறுத்து




(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான தமது நிலைப்பாட்டை சகல ஜனாதிபதி வேட்பாளர்களும் அறிவிக்க வேண்டுமென கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். மனாஸ் மக்கீன் மேலும் கூறியுள்ளதாவது, "சகல மாகாண சபைகளினதும் உத்தியோகபூர்வ கால எல்லை நிறைவடைந்தது.

சில மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்து வருடக்கணக்காகின்ற போதும், அவற்றுக்கான தேர்தலை நடத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகி விட்டன.

துரதிர்ஷ்டவசமாக, ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னரும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சிந்திக்காமல், பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறான விடயங்களை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னரும் தேர்தலை நடத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் தொடர்ந்து பிற்போடுவதானது, ஜனநாயகத்தை பாதிக்கும் செயலாக அமையும். குறிப்பாக ஜனநாயகத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்றும் கூறலாம்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் இன்று பிரசார மேடைகளில் பல விடயங்களை முன்வைத்து வருகின்றனர். ஆனால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இதுவரை எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை.

இதனூடாக, மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அவர்கள் எவ்வித அக்கறையும் இன்றி காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகையால் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், மாகாண சபைத் தேர்தல்தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார். (ஐ)

# சவுதியில் கோர விபத்து! இலங்கை இளைஞன் பலி

(றியாத்)

சவுதியில் மக்காஹ், ஹிரா பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோரவிபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

குருநாகல், பம்மண பகுதியை சேர்ந்த முஹமட் சலாஹுதீன் முஹமட் சதாம் (MSM Sadam) (வயது24) என்ற இளைஞனே இவ்வாறு வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் சவுதி அல்மராய் கம்பனியில் தொழில் புரிந்தவர் எனத் தெரிய வருகிறது.

இந்த விபத்து தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது . டன் சடலத்தை இலங்கை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தல்; இதுவரை 41 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பதிவாகியுள்ள விதி மீறல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் எண்ணிக்கை 41 ஆக அதி கரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களில் இதுவரை 36 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.


அதற்கு மேலதிகமாக, நாடு பூராகவும் தேர்தல் விதி மீறல்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1878

Search for people, places and things

### சுரேஷ்

வாழ்க்கையில் கடைசிவரை போராட வேண்டும் என்ற எளிய தத்துவத்தை நமக்குச் சொல்லித் தருகிறது இந்த காலியாகப் போகிற பேஸ்ட் என்னா அமுக்கு அமுக்க வேண்டியிருக்கு



### பிரசாந்

காதலுக்கு கண்ணு இல்லைன்னுதானே கேள்விப்பட்டிருக்கேன்... இது என்னடா காத்தும் இல்லை போலிருக்கே




### ராமு

ஒரு அப்பாவும் பையனும் உணவு விடுதிக்குச் சென்றார்கள்
அப்பா: வெயிட்டர் ஒரு பீர், ஒரு ஐஸ்கிறீம் கொண்டு வா
மகன்: ஏன்ப்பா உங்களுக்கு பீர் பிடிக்காதா?



### அச்சுதன்

நமக்கு இருக்கிறதெல்லாம் பெரிய கஷ்டமா?



### குமார்

நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து வாழப் பழகிவிட்டால் மகிழ்ச்சியை நாம் தேடிச் செல்ல வேண்டியதில்லை... மகிழ்ச்சி நம்மைத் தேடி வரும்



### வினுஜன்


புரிந்துகொண்டு மீண்டும் வந்துவிடுவார்கள் என்று இருந்து விடாதீர்கள்... ஒருவேளை மறந்தும் இருக்கலாம்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## அனுபவ வைத்தியம்



ஒருபாக்பரிடம் ஒருநோயாளி வைத்தியத்துக்குச் சென்றிருந்தான். டாக்டர் நோயாளியிடம் நீண்ட நேரம் நோயின் தன்மைகளைக் கேட்டுவிட்டு உடலைப் பரிசோதனை செய்து முடித்தார்.

பிறகு நீண்ட பட்டியல் கொண்ட ஒரு சீட்டை எழுதிக் கொடுத்து எப்படி எப்படி மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும் என்று விபரங்களைக் கூறினார்.

நோயாளி டாக்டரைப் பார்த்து "நீங்க சொல்ற பிரகாரம் சாப்பிட்டால் நோய் நல்லாயிடுங்களா?" என்று கேட்டான்.

"என் மகனைப் போலக் கருதித்தான் உனக்கு நான் இந்த வைத்தியம் செய்கிறேன்" என்றார்.

"உங்களுக்கு மகன் இருக்கிறாரா?' என்றான் நோயாளி.

"இருக்கிறான், இவனுக்கும் உன்னைப் பிடித்த நோய் தான் பிடித்திருக்கிறது. ஆகவே உனக்கு சுகமானதை வைத்துத்தான் அவனுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும்" என்றார்.

"அப்படின்னா அவருக்கு இதுவரையிலும் கொடுத்து வரும் மருந்தையாவது எனக்கும் கொடுங்கள். இந்தப் புது மருந்து வேண்டாங்க" என்றான்.

அதற்கு டாக்டர்? "நான் இதுவரையிலும் அவனுக்கு எந்தவித மருந்தும் கொடுக்கவில்லையே" என்று கூறினார்.

## படிப்போம்



பள்ளி செல்லுவோம் – நல்ல
பாடம் சொல்லுவோம்
துள்ளி ஆடுவோம் – மனத்
துயரை ஓட்டுவோம்.

வலிமை அடைவோம் – நல்ல
வாழ்வைக் காணுவோம்
உளிகள் எடுப்போம் – நல்ல்
சிலைகள் வடிப்போம்.

தொழிலை வளர்ப்போம் – வேலைத்
தொல்லை ஒழிப்போம்
எழிலை வளர்ப்போம் – நல்ல
அறிவை வளர்ப்போம்

## மலை கூறிய உண்மை



இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரம் மலையைப் பார்த்து ஹா... ஹா...ஹா.... என்று சிரித்தது.

"சிகரமே! நீ எதனால் சிரிக்கின்றாய்?" என்று மலை கேட்டது.

"மலையே! உன்னை விடவும் நான் எவ்வளவு உயரமாக நிற்கின்றேன் என்று பார்! நீ என் காலடியில் நின்றுகொண்டிருக்கின்றாய்! உன்னை விடவும் நான் மிகவும் உயர்ந்தவனாக இருக்கின்றேன். என் உயரத்திற்கு உன்னால் வர முடியாது" என்றது சிகரம்.

மலையோ அடக்கத்துடன் சிகரத்தைப் பார்த்து "சிகரமே! உன்னை எல்லோரும் "மலை உச்சி" என்று தானே அழைக்கின்றார்கள்! முதலாவது "மலை" என்று என் பெயரைக் கூறிய பின்னர் தான் "உச்சி' என்றும் "சிகரம்" என்றும் உன்னை அழைக்கின்றார்கள். மலையே இல்லாத போது சிகரமாகிய நீ ஏது? மலை உச்சி தான் ஏது?" என்று கூறியது.

இமயமலையின் பேச்சைக் கேட்ட எவரெஸ்ட் பதில் எதுவும் கூற முடியாமல் அமைதியானது. நாம் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம்! மலை கூறிய இந்த உண்மையினை இத்தனை நாட்களும் புரியாமல் இருந்து விட்டோமே! இதற்கெல்லாம் காரணம் நமது தற்பெருமைதான். இனிமேல் நாம் தற்பெருமையடிப்பதை கைவிட வேண்டியதுதான் என முடிவு செய்தது.

**கருத்து:-தற்பெருமையானது அனுபவ அறிவினை இழக்கச் செய்துவிடும்.**

## புகை என்பது என்ன?

"நெருப்பில்லாமல் புகையாது" என்பது பழமொழி. விறகு, கரி ஆகியவை எரியும் போது புகை எழும்புகிறது. எரிபொருள் முழுமையாக எரியாத நிலையில் புகை உண்டாகிறது. தீ நன்றாக சுவாலை விட்டு எரிந்தால் புகை எழும்பாது.

எரிபொருட்களில்காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் இவை பெருமளவிலும் கந்தகம் சிறிதளவிலும் காணப்படுகிறது.

எரிபொருட்கள் முழுமையாக எரிந்த பின் காபனீரொட்சைட்டு வளியும் எழும்புகிறது.

எரிபொருள் நன்றாக எரிவதற்கு அதிக அளவில் ஒட்சிசன் தேவைப்படுகிறது.

ஏனெனில் எரிதல் என்ற செயற்பாடு உயிரக இணைவினால் தான் நிகழ்கிறது.

எரியும்போது போதிய ஒட்சிசன் கிடைக்கா விட்டால் எரிபொருள் நல்ல முறையில் எரியாது. அரை குறையாக எரிவதால் தான் புகை எழும்புகிறது.

புகையில் காபனீரொட்சைட்டு மற்றும் காபனின் துகள்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

புகையில் அரை குறையாக எரிந்த பொருட்களின் துகள்கள் இருந்தால் புகை கருநிறமாக வெளி வரும்.

புகையினால் பல கெடுதல்கள் விளைகின்றன. வளி அசுத்தமடைகிறது. இதனால் உடல் நலம் கெடுகிறது.

புகையின் பாதிப்பினால் நுரையீரல் மற்றும் இதய சம்பந்தமான நோய்கள் உண்டாகும்.

சில விடயங்களில் புகை நலம் விளைவிக்கிறது. நுளம்பு, பூச்சிகளை துரத்த புகை பயன்படுத்தப்படுகிறது.

# புலிகளுக்கு உதவி; கைதானவர்கள் மீது சித்திரவதை குற்றச்சாட்டு பொய்!

## மலேசிய பொலிஸ்மா அதிபர் முற்றாக நிராகரிப்பு

(கோலாலம்பூர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பிலுள்ள சந்தேகநபர்கள் சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக மலேசிய பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் ஆதாரமற்றவை மற்றும் பொறுப்பற்றவை எனவும் அவர் தெரிவித்தார்.**



விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உதவி புரிந்த குற்றச்சாட்டின் கீழ் இரண்டு அரசியல்வாதிகள் உள்ளிட்ட 12 பேர் அண்மையில் மலேசிய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

தடுப்புக் காவலில் 5 பேர் பாலியல் ரீதியாக சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியானது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை மேற்கொண்டு மலேசியா பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த குற்றச்சாட்டினை மேற்கொள்ளும் எந்தவொரு நபரேனும் அதனை நிரூபித்துக் காட்டுமாறு அவர் சவால் விடுத்தார்.

சந்தேகநபர்கள் தங்க வைக்கப்பட்ட ஒவ்வொரு அறையிலும் கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளதால் அவ்வாறான சித்திரவதைகள் இடம்பெற்றிருந்தால் குறித்த கமராக்களில் பதிவாகியிருக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மலேசிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டென்ரீ முஹய்தீன் யசீன் குறித்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதுடன், அது தொடர்பில் விசாரணையொன்றை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார். (இ-7)

# மடகஸ்காரில் விபத்து இலங்கையர் மூவர் பலி!

(மடகஸ்கார்)

மடகஸ்காரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர்கள் மூவர் உயிரிழந்ததாக மடகஸ்கார் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூவரும் பயணித்த வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து ஆற்றில் விழுந்து விபதுக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த மூவ ரின் உடல்களையும் மீட்ட மடகஸ்கார் பொலிஸார் அவற்றை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (இ-7)

# வெடிக்காத நிலையில் பட்டாசு; அருகில் சென்ற சிறுவர் பலி



(கட்டானா)

எரியாத பட்டாசு என நினைத்து அருகில் சென்ற சிறுவன் ஒருவன் குறித்த பட்டாசு வெடித்ததன் காரணமாக உயிரிழந்தான்.

கட்டானா, எட்டம்பகஹவத்தை ஸ்ரீ துமிந்தாராம விகாரையின் வருடாந்த பெரஹரவின் போது. வீதி வழியே பூ பட்டாசு போடப்பட்டு வந்துள்ளது.

இதன்போது. கட்டானா வடக்கு. கதிரானவில் உள்ள எட்டம்பகஹவத்தை பிரதேசம் வழியாக குறித்த பெரஹரா சென்றபோது. ஒரு அடி நீளமான பட்டாசுகளை சிறுவன் ஒருவர் நிலத்தில் வைத்து பற்றவைத்துள்ளார். குறித்த் பட்டாசு வெடிக்காத நிலையில் மீண்டும் அதற்கு அருகில் சென்றுள்ளார். இதன் போது திடீரென பட்டாசு வெடித்து இவ்விபத்து ஏற்பட்டது.

காயமடைந்த மாணவன் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தான்.

கட்டானா வடக்கு. கதிரானாவில் உள்ள எட்டம்பகஹவத்தை 14 வயது ஜனித் டில்ஷான் எனும் மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ)

# கோத்தா ஜனாதிபதியானால் அரசியல் கைதிகள் விடுதலை

## தனக்கும் வாக்குறுதியளித்தாராம்– கருணா



(கொழும்பு)

தான் ஜனாதிபதியானதும் ஒரு அரசியல் கைதியைக் கூட வைத்திருக்கமாட்டேன். கண்டிப்பாக விடுவிப்பேன் என ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனக்கு வாக்குறுதியை வழங்கியதாக முன்னாள் பிரதியமைச்சரான கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்கள் விழிப்புடன் சிந்தித்து கோத்தபாய ராஜபக்ஷவை வெற்றியடைய வைக்கின்ற போதுதான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும்.

தமிழ் மக்களை நம்பி அவர் இந்தத் தேர்தலில் இறங்கியிருக்கிறார். ஆகவே அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாகப் பெரும்பாலான வாக்குகளை அவருக்கு அளித்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நான் தமிழர்களிடம் அன்பான கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நகரசபையினர் கட்டட அனுமதிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதில் தாமதம்

## உறுப்பினர் ஜெயக்குமார் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் கட்டட அனுமதிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதில் தாமதம் காட்டி வருவதாக சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் யோ.ஜெயக்குமார் குற்றம் சாட்டினார்.

சாவகச்சேரி நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

கட்டட அனுமதிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் காரணமாக சட்ட நடைமுறை பொது மக்களால் மீறப்படுகிறது.

அத்துடன் வீட்டுத் திட்டப் பயனாளிகள் சோலைவரிப் பத்திரப் பெயர் மாற்றம் உள்ளிட்ட சேவைகளுக்காக நகரசபையை நாடும் போது அவர்களுக்கு விரைந்து சேவையாற்ற வேண்டும்.

தற்போது சோலைவரி பெயர் மாற்றத்திற்கு ஆறு மாத காலம் தாமதிக்கப்படுகிறது. இதனால் வீட்டுத்திட்டம் கைநழுவிப் போகும் நிலை காணப்படுகிறது. அத்துடன் 25 பழுதடைந்த மின்குமிழ்கள் சேர்ந்தால் தான் திருத்த முடியும் என்ற நடைமுறையை மாற்ற வேண்டும். மாரி காலத்தில் திருடர்கள் பிரச்சினை அதிகமாக இருக்கும்.

வாரத்திற்கு ஒருமுறையாவது மின்குமிழ்கள் பராமரிப்பிற்காக நேரம் ஒதுக்க வேண்டுமென மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# நாட்டு மக்களை அச்சமடையச் செய்து சஜித்தை வெற்றி பெறச் செய்ய முயற்சி

## ஜே.வி.பி.விமர்சனம்



(எம்பிலிப்பிட்டிய)

ஊழல் மற்றும் மோசடியாளர்களுக்கு எதிராக அதிகாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என ஜே.வி.பி.தெரிவித்தது.

எம்பிலிப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் அதன் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களை அச்சமடையச்செய்து சஜித் பிரேமதாஸவை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டுவிட்டு ஓடாமலிருப்பதுதான் கடினம். – ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மண்டோதரியை சீதை என்று நினைத்த அனுமன்

இலங்கை வேந்தன் இராவணனால் கடத்தப்பட்ட சீதையைக் கண்டறிய அனுமன் இலங்கைக்கு வருகின்றான்.

முன் பின் சீதையைத் தெரியாத அனுமனுக்கு சீதையின் அங்க அடையாளங்களை இராமன் கூறிவைத்திருந்தான்.

அந்த குறிப்புகளோடு இலங்கைக்கு வருகின்ற அனுமன், வாயுபுத்திரன். மிகச் சிறந்த அறிவாளி. பலசாலி. பிரமச்சாரி.

சீதாப்பிராட்டியைத் தேடி வருகின்றபோது, இராவணேஸ்வரனின் மனைவி மண்டோதரியைக் காணுகின்றான்.

மண்டோதரி இலங்கை வேந்தனின் பட்டத்துராணி என்பதால் அதற்குரிய இலட்சணங்களோடு அவள் விளங்குகிறாள்.

மண்டோதரியைக் கண்ட அனுமன் அவளே சீதை என்று நினைத்து சிந்தை குலைகிறான்.

சீதை மீது இராமன் நிறைந்த அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்க, இங்கு சீதையோ பட்டத்து ராணியாக இருக்கிறாளே இஃதென்ன அநியாயம் என்பதே அனுமனின் சிந்தை குலையக் காரணம்.

என்ன செய்வது அறிவாற்றல்மிக்க அனுமன்கூட அறிவுத்தளர்ச்சிக்கு உட்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

இதற்குக் காரணம் அனுமன் இராம பக்தனேயன்றி சீதையின் அடியவன் அன்று. எனவே அனுமனின் சிந்தையெல்லாம் இராமனின் பக்கமாக இருந்ததனால், மண்டோதரியைச் சீதையென்று நினைக்கின்ற பேதமை அவனிடம் ஏற்படுகிறது. இங்கு அறிவாற்றல் மிகுந்த அனுமனே மண்டோதரியைச் சீதை என நினைக்கிறானெனில்,

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டதைக் கண்டு ஆகா எங்கள் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுவிட்டன.

இந்த ஒற்றுமைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சம்மதம் தெரிவித்தது பெரிய விடயம்.

இதற்கு மேலாக, 13 அம்சக்கோரிக்கைகள். அப்பாடா எவ்வளவு அற்புதம். தமிழர்களுக்கு இனியென்ன குறை.

ஐந்து தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தியவர்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள் என்று தமிழ் மக்கள் நினைத்தனர். நம்பினர்.

ஆனால் இதெல்லாம் மண்டோதரியை சீதையாகப் பார்த்த் சிந்தைக் குலைவேயன்றி வேறில்லை.

உண்மையான சீதை அசோகவனத்தில் இருக்கிறார். அவரை இனித்தான் வாயுபுத்திரன் காணப் போகிறான்.

ஆக, இப்போது நடந்தவை மாரிசனின் மாயமான் விளையாட்டும் கடத்தல் நிகழ்வுமே.

இதில் மண்டோதரியைச் சீதை என நினைத்த அனுமன் போல,

தமிழ்ப் பற்றுக் கொண்டவர்கள்; ஐந்து தமிழ்க கட்சிகளைக் கொண்டு மேடை ஏற்றிய நாடகத்தை நிஜம் என்று நம்பினர்.

இதில் ஐந்து தமிழ்க் கட்சிகளிலும் ஒரு சில கட்சிகள் ஒற்றுமையை – ஒற்றுமைப்படுத்தலை நிஜம் என்று நம்பியதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

# சஜித் மாத்திரமே அடிமட்ட மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்

## இராதாகிருஷ்ணன் பரப்புரை

(ஹற்றன்)

சஜித் பிரேமதாஸ மாத்திரமே அடிமட்ட மக்களின் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு சேவையாற்றக்கூடியவரென அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் மலையக மக்கள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு வந்தாலும் அவை பேச்சளவில் மாத்திரமே இருந்தன.

அதாவது. வரவு- செலவுத் திட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பதாகக் கூறினாலும் அதற்காக ஒரு சதத்தையேனும் ஒதுக்கவில்லை. அது மட்டுமல்லாமல் எந்தக் காரணம் கொண்டும் தேயிலைச் செடிகளைப் பிடுங்குவதற்கு அனுமதி வழங்க முடியாது எனக்கூறிய ஒரு கால கட்டமும் உண்டு.

ஆனால், சஜித் பிரேமதாஸ வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்கள் தொடர்பான விடயங்கள் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நிறைவேற்றக் கூடிய விடயங்களாகும். பொய்யான தேர்தல் வாக்குறுதிகள் வழங்கப்படவில்லை.

எனவே இவ்வாறான ஒரு தலைவரையே மலையக மக்கள் வரவேற்கின்றார்கள். மேலும் தலைவன் என்பவன் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். இந்தத் தகுதி எங்களுடைய வேட்பாளரிடம் இருக்கின்றது.

அதே போல எங்களுடைய நீண்ட கால கனவான மலையக தேசிய பாடசாலை, சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு சில நாட்களிலேயே அதற்கான அடிக்கல் நாட்டப்படும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் 10 தேசிய பாடசாலைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நான் சஜித் பிரேமதாஸவுடன் பேசியிருக்கின்றேன். 10 தேசிய பாடசாலைகள் போதாது அது 25 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று அதனையும் அவர் ஏற்றுக்கொண்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தீக்காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

(பலாங்கொடை)

பலாங்கொடை-தித்தெனிய பகுதியில் வீடொன்றில் இருந்து தீக்காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று குறித்த வீட்டுக்கு அருகில் வசிப்போர் வழங்கிய தகவலுக்கு அமைய மேற்படி சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பலாங்கொடை பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி வீட்டில் தனியாக வசித்து வந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஒரு மில்லியன் சிகரெட்டுக்கள் இன்று அழிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு மில்லியன் சிகரெட்டுக்களை அழிப்பதற்கு சுங்கத்துறை தீர்மானித்தது.

அதன்படி, மேற்படி சிகரெட் தொகை இன்று அழிக்கப்படும் என்று சுங்கத்துறையின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பிரபல தொழிலதிபர் ஒருவரால் டுபாயிலிருந்து கடந்த வருடம் குறித்த சிகரெட் தொகையை நாட்டுக்குள் கொண்டுவர வர முயற்சித்த போது சுங்க திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒரு போதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்"

கிரேக்கப் பழமொழி

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

கண்கள் உறங்கலாம், கனவுகள் உறங்கக் கூடாது. -அப்துல் கலாம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் மல்லாகம் ஒரு பகுதி, அளவெட்டி பிரதேசம், பன்னாலை, மல்லாகம் நீதிமன்ற கட்டடத் தொகுதி, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, சாந்தசோலை, யூனியன் அலோயன்ஸ், Senok, ராஜ் வலைத்தொழிற்சாலை, AMP Ceylon, ஓமந்தை தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உயிர்த் தரசங்குளம், செம்மண்தீவு, ஆத்திக்குளி, செம்மண்தீவு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனின் நிழல்



மனத்தின் இயக்க நிலைகளை இப்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். ஜீவகாந்தமானது உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களின் விரைவான சுழற்சியினால் எழும் அலைகளே. ஒரு உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களிலிருந்து இவ்வாறு வெளியாகும் அலைகள் அனைத்தும் உடலில் சுழன்று கொண்டே இருக்கின்றன.


பொதுவாக, எந்த ஆற்றல் சுழற்சி பெற்றாலும் திண்மை உடைய பகுதி மத்தியில் போய்ச் சேர்வதும், லேசான பகுதி புறத்தே நிற்பதும் துல்லியச் சமதளச் சீர்மை (Specific Gravity) தத்துவம் ஆகும். இந்த இயல்பின்படி, ஜீவகாந்தத்தின் பெரும்பகுதி தனது சுழலியக்கத்தினால் உடலின் மையப் பகுதிக்கு வந்து சேருகிறது. அங்கு இறுகி, குறுகி அழுத்தம் பெற்று ஜீவகாந்த நிலைக்களமாக அமைகிறது. இதனைக் கருமையம் என்றும், ஆன்மா என்றும் வழங்குகிறோம்.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும், ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம். பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ, அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

கருமையத்தில் இறுகிக் குறுகி, நிலை பெற்றிருக்கும் ஜீவகாந்த அழுத்தம் ஒவ்வொரு செயல் அல்லது அனுபோக அனுபவங்களுக்கும் ஏற்ப, தரமாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றம் பெற்ற தன்மைகள் அதே மன அலைச் சுழல் மறுபடியும் வரும்போது, மூளையின் காந்த அலைகளால் விரித்துக் காட்டப்படுகிறது. அப்பொழுது உண்டாகும் அகக்காட்சியே எண்ணங்கள்.

இறைநிலைக்கும் மன நிலைக்கும் உள்ள தொடர்பை உணரவேண்டும் என்றால், அவற்றை உருவத்துக்கும், அதிலிருந்து தோன்றும் நிழலுக்கும் ஒப்பிடலாம். உருவத்தை விட்டு நிழல் பிரிவதே இல்லை. ஆனால், நிழலை எடுத்துக்காட்டவல்ல ஒளியானது உருவத்தின் மீதுபடும் கோணத்திற்கு ஏற்ப, நிழலானது அளவில் மாறுபடும். அது போன்று மனிதமனம் இறைநிலையை விடுத்து இயங்குவதே இல்லை.

# தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் பதக்கங்களை அள்ளிய வடமாகாணம்


அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கோலூன்றி பாய்தலில் 18 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கம் மற்றும் இரு வெள்ளிப் பதக்கங்களை கைப்பற்றி 3 பதக்கங்களையும் சுவீகரித்துள்ளனர்.

அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ். திசாந் 4.30 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் அதே கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வி.றுசாந் 4.10 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.பவிதரன் 4.10 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# நசாத்கானுக்கு வெண்கலம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ந.மு.நசாத்கான் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ந.மு.நசாத்கான் 54.3 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# வேலணை மத்திய கல்லூரியின் சி.சுபீஜனுக்கு வெண்கலப் பதக்கம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உயரம் பாய்தலில் வேலணை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.சுபீஜன் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.




அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வேலணை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.சுபீஜன் 1.95 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# மிதுன்ராஜ் பதக்க வேட்டை தொடர்கிறது தட்டெறிதலிலும் வெள்ளிப் பதக்கம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். மிதுன்ராஜ் வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார். அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடை பெற்று வருகின்றது.



18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ். மிதுன்ராஜ் 45.88 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இவர் ஏற்கனவே நடந்த குண்டு போடுதல் போட்டியிலும் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சுவர்ணா உயரம் பாய்தலில் வெண்கலம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.சுவர்ணா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.




அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.சுவர்ணா 1.49 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# தேசிய மட்ட ஈட்டி எறிதல் போட்டி வேலணை மத்திய கல்லூரிக்கு வெண்கலம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட ஈட்டி எறிதலில் வேலணை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த் ச.பாணுசன் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் வேலணை மத்திய க்ல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ச.பாணுசன் 51.12 மீற்ரர் தூரம் எறிந்து வெண்கலப் பத்க்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

## யாழ்.பல்கலை...

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஆண்கள் விடுதியில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த கியூமன் என்ற மாணவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் மருத்துவப்பிரிவின் இறுதியாண்டு மாணவர் எனவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் நண்பர்கள் விடுமுறைக்குச் சென்று இரண்டு நாட்களின் பின்னர் அறைக்குத் திரும்பி வந்து பார்த்த போது அறையில் துர்நாற்றம் வீசியுள்ளது. அறையை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது குறித்த மாணவர் சடலமாக இருந்துள்ளார்.

குறித்த மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சம்பந்தன், சுமந்...

திய செயற்குழு நேற்று ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முடிவெடுப்பதற்காக கூடியிருந்தது.

இதன்போது வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கூட்டம் இடம்பெறும் இடத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முற்பட்டபோது பொலிஸார் அவர்களை கூட்டம் இடம்பெறும் பகுதிக்கு செல்ல அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் சுமார் 50 மீற்றர் தூரத்தில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழரசுக்கட்சியின் கூட்டம் முடிவடைந்து பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தமது பாதுகாப்பு வாகனத் தொடரணியில் வெளியேறியிருந்தனர்.

இதன்போது பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை அதிகளவு பொலிஸார் மூலம் வாகனத்தொடரணியை நெருங்காது தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் தனது செருப்பை கழற்றி வாகனத் தொடரணி மீது எறிய முற்பட்டபோது அவரை அங்கிருந்த பொலிஸார் மடக்கி பிடித்தனர். இதனால் கோபமுற்ற குறித்த தாய் பொலிஸாரை ஏசியதுடன் துரோகம் செய்வதாகவும் தெரிவித்தார். (ம-3,250)

## சிவாஜிலிங்கம்...

கட்சியின் செயலாளர் என். ஸ்ரீகாந்தா அறிவித்ததுடன் கட்சியில் இருந்து விலகியதை எம்.கே.சிவாஜிலிங்கம் உறுதிப்படுத்தினார்.

யாழில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இதனை உறுதிப்படுத்தினார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எம்.கே.சிவாஜிலிங்கம் வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்னர், கட்சியில் இருந்து விலகுமாறு கட்சி உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கட்சி வகித்த பதவியில் இருந்து விலகுவதாக கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

அதன்பின்னர், கட்சியின் செயலாளர் அறிவித்தமைக்கு அமைவாக நேற்று 03 ஆம் திகதியில் இருந்து எம்.கே.சிவாஜிலிங்கம் கட்சியில் இருந்து விலகிவிட்டதாகவும் அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் சிவாஜிலிங்கம் ரெலோ கட்சியில் இருந்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்தும் தான் விலகிவிட்டதாகவும் அறிவித்தார். (ம-3,101)

## அதிகாரப் பகிர்வு...

நேற்று கிளிநொச்சி பொது சந்தை வளாகத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நாட்டில் வெள்ளை வான் வருவது கிடையாது. ஆனால் மக்களை தேடி அவசர அம்புலன்ஸ் வருகிறது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டுமா? இல்லையா? என்பதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மொட்டுக்கு வாக்களித்தால் வெள்ளை வான் மட்டுமே வரும்.

2015 க்கு பின்னர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யலாம், ஊர்வலம் போகலாம், பேசலாம், எழுதலாம் இந்த நிலைமை தொடர வேண்டுமா? வேண்டாமா? நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவற்றை உருவாக்கி சுதந்திரத்தை உருவாக்கியுள்ளோம்.

2015க்கு பின் புதிய அரசியலமைப்பினை ஏற்படுத்த முயற்சித்த போதும் பாராளுமன்றத்தில் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையினால் அதனை கொண்டுவர முடியாது போய்விட்டது.

ஆனால் புதிய அரசிலமைப்பின் ஊடாக அதிகார பகிர்வை கொண்டுவரவேண்டுமானால் மக்கள் செய்ய வேண்டியது இரண்டு விடயங்கள்தான்.

ஒன்று வரும் 16ம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்குவது. இரண்டாவது பாராளுமன்றத்தில் 120க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை எமக்கு வழங்குவது என்றார். (ம-3)

## ஜனாதிபதித் தேர்...

எமது மத்திய செயற்குழுவின் முடிவாக அன்னம் சின்னத்தில் போட்டியிடுகின்ற சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் இலங்கை தமிழரசு கட்சியின் உத்தியோகபூர்வ செயற்குழு இன்றையதினம் (நேற்று) எடுத்திருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் இதனை அறிவிப்பது மற்றும் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லவேண்டிய விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் கைகளில் நாம் ஒப்படைத்துள்ளோம்.

மற்றைய இரண்டு கட்சித்தலைவர்களோடும் கலந்தாலோசித்து இந்த தீர்மானத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார். பல விடயங்களை ஆராய்ந்திருக்கிறோம். பிரதான வேட்பாளர்கள் இருவர் தொடர்பில்தான் எமது கருத்துக்கள் இருந்தது. அவர்களுடைய கடந்த கால செயற்பாடுகள், தேர்தல் அறிக்கைகள் தொடர்பாக பல விடயங்களை நாம் ஆராய்ந்து இன்றைய சூழலில் எமது மக்களுக்கு உபயோகமான ஒரு நடவடிக்கையாக சஜித்தை ஆதரிப்பதற்கான நிலைப்பாட்டை ஏகமனதாக எடுத்துள்ளோம்.

எமது கருத்தையும் மக்கள் கேட்கிறார்கள். மக்கள் திறமைசாலிகள். அவர்களிற்கு அரசியல் நன்றாகவே தெரியும். தமிழ் மக்கள் நிதானித்து வாக்களிப்பவர்கள். அவர்களிற்கு அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது.

ஆகவே மக்களுடைய கருத்தையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் கொடுப்பது என்பது நீங்கள் விரும்புபவர்களுக்கு வாக்களியுங்கள் என்று சொல்லுவது அல்ல. நிதானத்தை தற்போது இருக் கும் அரசியல் சூழ் நிலையிலே தமிழ் மக்கள் சார்பாக ஏனைய தரப்புகளுடன் மக்களின் பிரதிநிகளாக நாம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். அந்தக் கடப்பாட்டை நாம் சரிவர செய்வதாக இருந்தால் மக்களிற்கு ஒரு வழிகாட்டுதல் கொடுக்க வேண்டிய அத்தியாவசிய கடப்பாடு இருக்கிறது அதை நாங்கள் செய்வோம் என மேலும் தெரிவித்தார். (ம-3,250,299)

## இனப்...

தெரிவித்தார்.

இனப் பிரச்சினையை காயத்தை போல தொடர்ந்து வைத்திருக்க முடியாது. அதை தீர்த்து விட்டு முன்னோக்கி செல்ல வேண்டியுள்ளது. எமது திட்டத்தை பகிரங்கமாக முன்வைத்துள்ளோம். யாருடனும் இரகசிய ஒப்பந்தங்கள் கிடையாது. எமது யோசனையை ஏற்று வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் எம்முடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். (ம-3)

## கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் டி.எம்.சதுரங்க பொலிஸ் அணியினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி நேற்றைய தினம் கிளிநொச்சி ஏ9 வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது பளையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பழைய இரும்புகளைக் கொண்டு சென்ற வாகனத்தில் இருந்து 4 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் வாகனச் சாரதியான சகோதார மொழியைச் சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பான மேலதிக விசாரணையை கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (ம-3,310)

## போதைப்பொருள்...

பண்டாரகமவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் போதைப்பொருள் வியா பாரத்திற்கும் அடிமையாகியுள்ளார்கள். இதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்.

மக்களின் வாழ்க்கைச்செலவுகள் அதிகரிக்கும்போது வாழ்வதற்காக நடுத்தர மக்கள் தவறான வியாபாரங்களை புரிந்துள்ளார்கள்.

எனவே நவம்பர் 17ஆம் திகதிக்கு பின்னர் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் போதைப்பொருள் உற்பத்தியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சிறந்ததாகும்.

தேசிய பாதுகாப்பும், சட்டம் ஒழுங்கும் முறையாக நிலைநாட்டப்படும். வீழ்ச்சியடைந்துள்ள கலாசாரம் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும் அவர் கூறினார். (ம-3)

## ஜனாதிபதித்...

ஜனநாயக ரீதியில் மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவுற்று சகல மாகாண சபைகளும் ஆளுநர்களின் கீழ் கொண்டுவ்ரப்பட்டுள்ளன.

அவற்றுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராகி வருகின்றோம்.

ஆனால், சில கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. இது ஆரோக்கியமானதாகப்படவில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தலை காலம் கடத்துவது ஜனநாயக முறைமைக்கு விரோதமானதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

மாகாண சபைகளின் அதிகாரம் தனிநபர்களிடம் தொடர்வது ஆரோக்கியமானதல்ல எனவும் ஆணைக்குழுத் தலைவர் மேலும் கூறியுள்ளார். (ம-3)

## சுதந்திரக் கட்சி...

களில் இருந்து நீக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாளை செவ்வாய்க்கிழமை இரவு கட்சியின் மத்திய குழுவின் அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்கவை கட்சியில் இருந்து நீக்குவதற்கு அவர் பரிந்துரை செய்யவுள்ளார். (ம-3)


தன நிதானய
திகதி - 2019.11.03
சீட்டிழுப்பு இலக்கம் - 222
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 11 21 49 66
NATIONAL LOTTERIES BOARD

நீரோகா
திகதி: 2019/11/03
சீட்டிழுப்பு இலக்கம்: 0619
லக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 19 26 40 58

மஹஜன சம்பத
திகதி: 2019/11/03
சீட்டிழுப்பு இலக்கம்: 4041
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 7 5 4 5 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி: 03-11-2019
சீட்டிழுப்பு இலக்கம்: 2290
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 09 17 20 47

கோடிபதி கப்றுக
சீட்டிழுப்பு வாரம்: 516
திகதி: 03 நவ. 2019
வர்ணம்: மஞ்சள்
Q 02 46 53 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் 75, 867, 940/=
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 781
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.11.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,762,390/-
வெற்றி இலக்கங்கள்: 10 23 62 69 K
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1069
சீட்டிழுப்பு திகதி 03.11.2019 ஞாயிறு
L 16 52 53 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,533,848
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 03/11/2019
வெற்றி வாரம்: 2667
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள்: கடகம் 08 15 35 61
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2019/11/04 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

# மைத்திரியின் இறுதி உரை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் ஆற்றும் இறுதி உரையில், முக்கிய அறிவிப் பொன்றை வெளியிடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் எதிர்வரும் 16ஆம் திகதிக்குப் பின்னர் முடிவடையவுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் ஜனாதி பதியாக பாராளுமன்றத்தில் தனது இறுதி உரையை எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக் கிழமை மைத்திரிபால சிறிசேன நிகழ்த்த வுள்ளார். (ம-3)


அமெரிக்க அதிஸ்ட விசா- நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

2021ல் நீங்களும் அமெரிக்காவில்...

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

சனத்தொகை கூடிய ஆசிய நாடுகளில் பங்களாதேஸ்,சீனா,இந்தியா, பாக்கிஸ்தான் பிலிப்பைன்ஸ்,வியட்னாம் போன்ற நாடுகள் விண்ணப்பிப்பதற்கு தகுதி இழந்தமையால் இலங்கையருக்கே வாய்ப்புக்கள் அதிகம். ஆகவே அலட்சியம் செய்யாது இறுதி சந்தர்ப்பத்தினை உடனடியாக பயன்படுத்தி அமெரிக்கா செல்லும் அதிஸ்ட வாய்ப்பினை பெற்றிடுங்கள்.

வெற்றிபெற்று அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களில் சிலர்



0768226241

55000 இலவச விசாக்கள்

அலட்சியம் வேண்டாம் உடனே பதியுங்கள்

V2 Travels (C-8117)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 | புதுக்குடியிருப்பு 0764550673 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 | மருதங்கேணி 0764550671 |



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலையில் கற்பிக்கும் சிரேஸ்ட ஆசிரியர்

திரு.கனகரத்தினம் சந்திரகுமார்

(BED.Dip IN TEACH)

அவர்கள் 19.09.2019 அன்று கிளிநொச்சி மாவட்ட மஜிஸ்திரேட் நீதவான் கௌரவ T.சரவணராஜ் முன்னிலையில் அகில இலங்கைக் கான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : ஆசிரிய நண்பர்கள் பூநகரி முழங்காவில். (854)


## தேர்தலில் யாரை ஆதரிப்பது தொடர்பில்

# ரெலோவின் இறுதி முடிவு 6ஆம் திகதி வெளியாகும்

## என்.ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் தமிரசுக் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசுக்கட்சி தன்னுடைய நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்துள்ளது.

கூட்டமைப்பின் ஏனைய இரண்டு அங் கத்துவக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுடன் கலந்து ஆலோசிக்காமல் இந்த முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள் ளது.

இந்த முடிவு கூட்டணி தர்மத்துக்கே விரோதமானது. இனிமேல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் பேசுவதற்கு எமது கட்சியான ரெலோவிற்கு எதுவும் கிடையாது.

நமது தலைமைக் குழு எதிர்வரும் 6 ஆம் திகதி வவுனியாவில் கூடி விவாதித்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவு எடுப் பது என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக் கிறது. அதற்கு அமைவாக 6ஆம் திகதி கூட் டத்தின் முடிவில் எமது நிலைப்பாட்டை நாம் பகிரங்கமாக அறிவிப்போம் என என்.ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்தார். (ம-3)


3 - 6 மாதத்தில் வெளிநாட்டு வேலை & விசா உடன்

WORK VISA
Malaysia, Romania
Dubai, Kuwait, Oman
Qatar, Saudi Arabia

STUDENT =>WORK VISA
Australia, Canada,
New Zealand
Switzerland, Germany

Tourism & Hospitality Management
TVEC & UK Certified
ஹொட்டேல் முகாமைத்துவம்
FAST TRACK – ENTRY LEVEL – ADVANCED LEVEL

3ஒ மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச
FREE ENGLISH அடிப்படையிலிருந்து IELTS வரையில்

விளக்க கருத்தரங்கும் பதிவுகளும் நவம்பர் 9 சனி 0773616798

அனுமதி இலவசம் 50-100% கட்டண தழிவுகள்

No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
(C-8120)

221-1/1. மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம். இஷாரா ஹொட்டல் - ரீன் கேர்ல் அருகே
SIKARAM ACADEMY ☎ 021 221 9 221



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK – 550 /=Kg
கனடா – 950 /=Kg
ஜேர்மனி – 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
(C-8115)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS


# வடக்கு ஆளுநர் நாடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற் கொண்ட வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றையதினம் காலை நாடு திரும்பினார்.

கடந்த 17ஆம் திகதி ஆளுநர் உட்பட்ட குழுவினர் லண்டன் மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் சந்திப்புக்களில் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது. (ம-3,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (849)



நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8109)



CCTV Technician Course

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்
28th Batch : 10-NOV-2019 (*Conditions Apply) (C-8106)

Mobile Phone Repairing Course
01.12.2019 முதல் ஆரம்பம்

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவில் அருகாமையில்)
021-7306000, 076-7013060



வேலையாள் தேவை

கொக்குவிலில் இயங்கும் ஆயுர்வேத மருத்துவ நிலையத்தில் கடமையாற்ற தாதிய அனுபவம் உள்ள பெண் வேலை யாள் தேவை.

தொ.பே. : 077 820 1195, 075 041 3579 (847)



வீடு விற்பனைக்கு

மானிப்பாய் NDB வங்கிக்கு அருகாமை யில் 3 1/2 பரப்பு காணியுடன் நவீன முறை யில் அமைக்கப்பட்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. (848)

தொடர்பு : 077 078 4447



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532



வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபலமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் ஆண், பெண் உடன் தேவை. (C-8123)

தொடர்புகளுக்கு : 077 834 8789



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536 (C-8118)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.